விலைரூபா 1-25

# ஈழநாடு
# THE EELANADU

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)
மலர் 25 ஐப்பசி 1 முஹறம் 11 இதழ் 247
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 18-10-83

வடக்கு, கிழக்கில் குடியேறிய

## மலையகதமிழரை வெளியேற்ற ராணுவரீதியில் அரசு முயற்சி!

### இந்திராவிடம் 'அமிர்' தகவல்

(புதுடில்லி)

இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தியை இலங்கை எதிர்க்கட்சித்தலைவரும்தமிழர் விடுதலைக்கூட்டணி செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கமும் திரு. ஜி. பார்த்தசாரதியும் நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினார்கள்.

சுமார் ஒருமணிநேரம் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது இலங்கையில் தற்போதைய நிலைகுறித்து விரிவாக ஆராயப்பட்டதாக தெரிகிறது.

இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரங்களைத் தொடர்ந்து வடக்கு கிழக்கு பகுதிகளில் குடியேறியுள்ள மலையகத் தமிழர்களை வெளியேற்றுவதற்கு இராணுவ ரீதியில் விரிவான நடவடிக்கைகளை இலங்கை அரசுசெய்துவருவதாக திரு. அமிர்தலிங்கம்

(8ம் பக்கம் பார்க்க)

## ● மட்டுநகர் கச்சேரிச் சுரங்க அறையிலிருந்து

# 86 துப்பாக்கிகள் கொள்ளை!

### காவலர்களைக் கட்டிவைத்து இளைஞர்கள் கைவரிசை !!

(மட்டக்களப்பு நிருபர் இரா. துரைரத்தினம்)

மட்டக்களப்பில் மிகப் பத்திரமான இடமாகக் கருதப்படும் கச்சேரியின் சுரங்க அறையிலிருந்து எண்பத்தாறு துப்பாக்கிகள் நேற்று அதிகாலை கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. 'றிவோல்'வருடன் நுழைந்த பத்து இளைஞர்கள் அங்கு இருந்த காவலாளிகள் நால்வரைக் கட்டி வைத்து, துணிகரமாக தமது கைவரிசையை காட்டிவிட்டு மறைந்துவிட்டனர்! பன்னீராயிரம் ரூபாய் பணமும் இவர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் பழைய ஒல்லாந்தர் கோட்டையில் அமைந்துள்ள கச்சேரிக் கட்டிடத்தில் சுரங்க அறை ஒன்றில் இந்தத் துப்பாக்கிகள் வைக்கப்பட்டிருந்தன.

முக்கிய அதிகாரிகளைத் தவிர வேறு கச்சேரி அலுவலர் எவருக்குமே இந்தத் துப்பாக்கிகள் இருப்பது தெரியாதாம்.

நேற்று அதிகாலை 2-30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது 10 இளைஞர்கள் றிவால்வர்களுடன் வந்து அங்கு கடமையில் இருந்த நான்கு காவலர்களையும் கட்டிப் போட்டுவிட்டு இத்துப்பாக்கிக் கொள்ளையை நடத்தினர்களாம்.

வ. சுப்பிரமணியம், பாலேந்திரன், கே. நடராஜா, வ. பேரின்பராஜா ஆகியோரே கடமையில் இருந்த காவலர்களாவர்.

#### 212 துப்பாக்கிகளில் 86-ஐ இளைஞர்கள் தெரிந்தெடுத்தனராம்

சுரங்க அறையில் 212 துப்பாக்கிகள் இருந்ததாகவும் அவைகளில் 86 துப்பாக்கிகளை இளைஞர்கள் தெரிந்தெடுத்துக்கொண்டு சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### பெற்றோல் நிலையத்திலும் 45 ஆயிரம் கொள்ளை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் உள்ள கூட்டுறவுச்சங்க பெற்றோல் நிலையத்திலும் துப்பாக்கி இளைஞர்கள் 45ஆயிரம் ரூபாவைக கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கச்சேரியில் இடம்பெற்ற துப்பாக்கி-பணம் கொள்ளைக்கு முன்னர் இரவு 10-30 மணியளவில் இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பெற்றோல் நிலைய பொறுப்பாளர் நிலையத்தைபூட்டிவிட்டு போகையில் 5இளைஞர்கள் துப்பாக்கி முனையில் அவரை மடக்கினர்களாம். அவரை சில மைல் தூரத்துக்குக் கொண்டு சென்று அரசடிசந்தியில் இருவருடன் காவலில் வைத்துவிட்டு திறப்பை வாங்கிக் கொண்டுவந்தார்கள். என்றும் திறப்புசரிவராததனுல் அவரை மீண்டும் கூட்டிவந்து பெற்றோல் நிலையத்தை திறக்கச் செய்து அங்குபத்திரமாகவைக்கப்பட்டிருந்த 45 ஆயிரம் ரூபாய் பணத்தைக் கொள்ளை அடித்துச்சென்றதாகவும்கூறப்படுகின்றது.

#### பொலிசார் ஒய்வெடுக்கிறுர்கள்....

இளைஞர்கள் திரும்பிச் செல்கையில், "நாளைக்கு டி. ஐ. ஜி.க்கு அணிவகுப்பு நடக்கவிருப்பதால் இன்று பொலிஸ்காரர் ஓய்வு எடுக்கிறுர்கள். நீங்கள் அவசரப்படாமல் ஆறுதலாகப் போய் பொலிசில் புகார் செய்யலாம்" என்று பெற்றோல் நிலையப்பொறுப்பாளரிடம் கூறிவிட்டுச் சென்றுர்களாம்.

## "வன்முறைச் சம்பவங்களுக்கும் கூட்டணிக்கும் எதுவித தொடர்புமில்லை

### சர்வதேச விசாரணையை சந்திக்கவும் தயார்"

### தமிழர் விடுதலைக் கூட்டணி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலை கூட்டணி எத்தகைய வன்முறைச் சம்பவங்களோடும் தொடர்புடையதல்ல என்பதை நிரூபிக்க, சுதந்திரமான சர்வதேச விசாரணையைச் சந்திக்க தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளது. பொதுநல அரசு, பாராளுமன்ற ஒன்றியத்தின் மூலம் விசாரணைக் குழுவொன்றை நியமிக்கும்படியும் அரசாங்கத்தை கூட்டணி கேட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் பயங்கரவாத இயக்கத்துக்கும் தொடர்பிருப்பதாக அண்மையில் வெளிவந்த செய்திகளை மறுக்கும் வகையில் கூட்டணி நேற்று அறிக்கையொன்றினை வெளியிட்டது.

தற்போது நாட்டிலுள்ள கூட்டணித் தலைவர்கள் ஆலோசனை நடத்திய பின்னர் இது தொடர்பாக நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

'தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் பயங்கரவாத இயக்கங்களுக்கும் தொடர்புண்டென்றும் வவனியா புலேந்திரனின் கொலைக்கும் கூட்டணியே பொறுப்பென்றும் அண்மையில் வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பான, அபாண்டமான கூற்ருகும். இக்கூற்றை முற்று முழுதுமாக நிராகரிப்பதுடன் இககூற்று வேண்டுமென்றே திட்டமிட்டு கூட்டணித் தலைமைக்கு எதிராக மக்கள் மனதில் தவருன எண்ணத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும்.

'எமது இயக்கம் சாத்வீக கொள்கையின் அடிப்படையில் மட்டுமே செயற்படும் இயக்கமாகும்.

"நேரிடையாகவோ- மறைமுகமாகவோ வன்முறைச்சம்பவங்களோடும் சம்பந்தப்படுத்தும் குற்றச்சாட்டுகளை முற்ருகநிராகரிக்கிறேம்.

"அரசியல் பிரச்னைகளுக்கான தீர்வுகாண்பதற்கு வன்முறைவழியைப் பின்பற்றுபவர்களுக்கு எமது இயக்கத்தில் என்றும் இடம் அளிக்கப்படவில்லை. அத்தகைய வன்முறையாளர்கள் எமது இயக்கத்தினுள் ஊடுருவல் செய்வதையும் நாம் அனுமதித்ததில்லை.

"ஐ. தே. க. உறுப்பினர்களும் உயர் பதவிகளில் உள்ளோரும் 83 ஆடிக்கலவரச்சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்கள் என்று வெளியான குற்றச்சாட்டைப் பொறுத்தவரையில் இத்தகைய ஒரு மறுப்பை ஐக்கிய தேசியக்கட்சி வெளியிடுமா?

"ஒருபாடசாலை மாணவனின் நிரூபிக்கப்படாத சிறுபிள்ளைத்தனமான தகவல்கள் மூலம் வடக்கு கிழக்குப் பகுதிகளிலுள்ள அரசியல் எதிர்ப்பை

(8ம் பக்கம் பார்க்க)

ஏல விற்பனை

மீன் பிடி வள்ளம்

இலக்கம் 1 யீ 5048 யா கொண்ட 28 அடி இயந்திர வள்ளமும் இலக்கம் பீ எம் ஜே / 0249 கொண்ட யன்மார் 30 எச். பீ. இயந்திரமும் 7-11-83ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு குருநகர் கடற்கரையில் குருநகர் கடற்றெழில் அபிவிருத்திச் சங்கத்தின் டீசல் விற்பனை நிலையத்திற்கு முன்பாக வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

இவ்வள்ளம் மேற்படி இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பிரதேச முகாமையாளர்,
பிரதேச தலைமை அலுவலகம்,
மக்கள் வங்கி,
யாழ்ப்பாணம்.

9298

### யாழ். மாவட்டத்தில் முதலில்

## மானிப்பாய் எம். பி. பதவி இழந்தார்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் முதலில் பதவிஇழந்த மானிப்பாய் எம். பி. திரு வி. தர்மலிங்கத்தின் இடத்துக்கு ஒருவரை நியமிக்குமாறு உதவித் தேர்தல்ஆணையாளர் கூட்டணியின் அமைப்புச் செயலாளரைக் கேட்டுள்ளார்.

தொடர்ந்து மூன்று மாதம் பாராளுமன்றம்செல்லாததால் கடந்த 8ம் திகதி பதவிஇழந்த மானிப்பாய்எம் பி.யின் இடத்

(8-ம் பக்கம் பார்க்க)

## மாதகல் கடற்கரை கிடங்கில் ஆணின் சடலம்!

(மாவிட்டபுரம்)

மாதகல் கடற்கரையில் முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் ஒன்று கிடங்கொன்றில் மூடப்பட்ட நிலையில் நேற்று கண்டு பிடிக்கப்பட்டு, தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

ஒரு கை மட்டும் வெளியே தெரிந்து கொண்டிருந்ததால் இந்தச்சடலம் இருப்பது தெரிய வந்ததாம் சடலம் மக்கியால் மூடப்பட்டிருந்ததாம்.

இளவாலை புனித ஹென்றியரசர் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் வணபிதா ஜஸ்டின் ஞானப்பிரகாசத்துக்கு அயலவர்கள் தகவல் கொடுத்ததையடுத்து, இவர் காங்கேசன் துறைப் பொலிஸாருக்கு இவ் விஷயத்தை அறிவித்தார்.

[8ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பாவிப்பிலுள்ள சீ-நோர் சிறிய வள்ளம், பதினொரு முழ மரம் (அல்விசா) ஐந்து கட்டி, 15 ஹோஸ் பவர் (யமஹா) மோட்டார், இன்னும் வேறு மோட்டர்களும் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். சு. கந்தசாமி அன்ரன் ரேடர்ஸ் பழைய கண்டி காரைநகர். 9292

இரண்டு பரப்பிலமைந்த வீடு உடனடியாக விற்பனைக்குண்டு. கேள்விகள் 18-10-83க்கு முன் கோரப்படுகின்றது. விலை 6½ இலட்சத்துக்கு கூடிய தொகை. விபரம் 54, 3ம்குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 9351

## பயிற்சி

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இலகுவாக வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கு அதிதுரித வெல்டிங் (Welding) பயிற்சி வகுப்புகள 19-10-83-ல் ஆரம்பமாகின்றன. யாழ். நகரில் அதிக செய்முறை அறிமுறையுடன் நடைபெறும் பயிற்சியாகும். சர்வதேசப் புகழ் வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும். யாழ். நகரில் அரசினரின் அங்கீகாரம் பெற்ற தனியார் கல்லூரி விபரங்களுக்கு :- அதிபர், உயர்கலைக்கல்லூரி, 73, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 9357

## வகுப்புகள்

[கடந்தகாலப் பரீட்சையில் 80% மான மாணவர்கள் சித்தியடைந்ததும் 5 வருட காலமாக தொடர்ந்து நடைபெறுவதுமான ஒரே நிறுவனம்]. C. E. I. Part I 1985 மே பரீட்சைக்கு (London Engineering Course) க. பொ. த. (உயர்தரம்) 2 பாடங்களுடன் புதிய வகுப்பு ஆரம்பமாகியது. விபரங்களுக்கு சனி, ஞாயிறுகிழமைகளில் தொடர்பு கொள்ளவும். நிர்வாகி, Jase Trimmer Hall, 21/6, வேம்படி ரோட், யாழ்ப்பாணம். 9352

## தேவை

B. S. A. B.31. சுவிங்ஆம் 3.5 மோட்டார் சயிக்கிள் தேவை. விலை இலக்கம் ஆகிய விபரங்களுடன் தொடர்பு கொள்க: மல்ரி சேவிசஸ், 234 (446), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 9346

## வாடகைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் மானிப்பாய் வீதியில் வசதியான வீடு வாடகைக்குண்டு. கடிதமூலம் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 9350 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 9350

## நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

## வெற்றுச் சாக்கு விற்பனை

10,000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர அடிப்படையில் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு எம்முடன் தொடர்புகொள்ளவும். விண்ணப்ப முடிவு திகதி 26-10-83.

பொதுமுகாமையாளர்
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்,
14-10-83 திருநெல்வேலி.
(9362)

## விவசாயப் பயிற்சி வகுப்புக்கள்

(துணுக்காய்)

முல்லைத்தீவு கமநலச்சேவை திணைக்களத்தினரும், துணுக்காய் பகுதி விவசாய போதனாசிரியர் பகுதி உத்தியோகத்தர்களும் ஒன்றிணைந்து இப்பகுதி விவசாயிகளுக்கு பயிற்சி வகுப்புக்களை நடாத்தினர்கள்.

தேறாண்கண்டல், துணுக்காய, யோகபுரம், ஆகிய கிராம வசாயிகளுக்கென நடத்தப்பட்ட இந்த ஒருநாள் பயிற்சி வகுப்பில் 300 க்கும் அதிகமான விவசாயிகளும், விவசாயப் பகுதியினரால் தெரிந்தெடுக்கப்பட்ட தொடர்பு கமக்காரர்களும் பங்கு கொண்டனர்.

க. சி. முத்துக்குமாரசாமி
சட்டத்தரணி,
பருத்தித்துறை.

## பின் முற்றுக்கும் தீர்வையின் அறிவித்தல்

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனம் முடியாமல் காலம் சென்ற சுப்பிரமணியம் முருகேசுவின் சொத்துக்களின் விடயமாக.

முருகேசு சுப்பிரமணியம்
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.
—மனுதார்

தத்துவ ]
நியாயாதிக்கம்] இல. 1053

இத்தால் சகலருமறிக மேலே குறிப்பிட்ட இலக்கத் தத்துவ வழக்கு இம் மன்றில் தாக்கல்செய்யப் பட்டுள்ளதென்றும் மேலே சொல்லிய காலம் சென்றவரின் சொத்துக்கள் நிர்ணயிப்பதற்காக பின் முற்றுக்கும் தீர்வை பதியப்பட்டுள்ளது. எனவே எவரேனும் இதில் அக்கறை உள்ளவர்கள் இந்நீதிமன்றத்தில் 1978ம் ஆண்டு ஐப்பசி மாதம் 27ந் திகதி முற்பகல் 9 மணியளவில் சமுகம் கொடுத்து பின் முற்றுக்கும் தீர்வை முழுத்தீர்வையாக ஏன் பயக்கூடாதென்பதற்கு ஏதேனும் காரணம் இருப்பின் அவைகளை சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

மன்றின் கட்டளைப்படி
க. விஸ்வலிங்கம்,
(ஒப்பம்)
பதிவாளர்.

1978ம் ஆண்டு புரட்டாதி மாதம் 6ந் திகதி.
12-10-83

காரணம் காட்டும் திகதி 10-11-83க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

றிச்சேட் ஜெயராசசிங்கம்,
பதிவாளர்.
9287

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# விண்ணப்பத்திற்கான அறிவித்தல்

யாழ்ப்பாணம் இலங்கை மாவட்ட நீதிமன்றத்தில்

திரு. கிருஷ்ணமூர்த்தி தெட்சணாமூர்த்தி
181, லோங்பீல்ட் லேன், செசன்ற், ஹேட்போட்சயர், பெரிய பிரித்தானி- அவர்களின் மரணசாதனமும் தத்துவமும் சம்பந்தமாக

காலஞ்சென்றவர்

இலக்கம் T 3722

அத்தோடு

பிரிததானிய நீதிமன்றங்களில் மீள் முத்திரை பொறித்தல், மெய்ப்பித்த விருப்ப உறுதியின்படி- திருத்திய சட்டத்துறை சட்டமியற்றுதலின் வண்ணம் 99ஆம் அத்தியாயத்தின் நான்காம் தொகுதி கட்டளைப்பிரகாரம்.

ஆர்தர் சிசில் ரெயிலர், 81, பில்கிறிம் வீதி, நியூகாசில், அப்போன் ரைன், ஐக்கிய இராச்சியம்.

நிறைவேற்றுபவர்

மரணசாதன உறுதியில் குறிக்கப்பெற்றவண்ணம்- நாஷனல் வெஸ்றமினிஸ்ரர் வங்கி வரைவுள்ளது. மரணசாதனத்தில் குறிக்கப்பெற்ற மற்ற நிறைவேற்றுபவர் இராஜிநாமாச் செய்துள்ளார்.

தமது சட்டத்தரணி மூலம் ஆறுமுகம் சண்முகராசா, 222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் இலங்கை.

விண்ணப்பதாரர்

இத்தால் அறிவித்தல் கொடுப்பது, இங்கே குறிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினன்கு 14 நாள்கள் முடிந்ததும் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் முறையாக விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும். இது பிரித்தானிய நீதிமன்றங்களின் மீள் முத்திரை பொறித்தல் சம்பந்தமான 99ஆம் அத்தியாயத்துக்கட்டளைப்பிரகாரமாகும். இதுமுன்சொன்ன கிருஷ்ணமூர்த்தி தெட்சணாமூர்த்தி, 181, லோங்பீல்ட் லேன், செசன்ற், ஹேட்போட்சயர், ஐக்கியராச்சியத்து- காலஞ்சென்றவரினதாகும். இது நியூகாசில் அப்போன்ரைன், ஐக்கிய இராச்சியத்து உயர்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பெற்றதாகும். அனுமதிபெற்ற நாள் 06 யூலை, 1982.

இன்று 18-ம் திகதி ஐட்பசி 1983

விண்ணப்பதாருக்கான சட்டத்தரணி

(ஒப்பம்) K. JEGANATHAN

9360

# கேள்வி அறிவித்தல் - 1984

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கடைகள், இறைச்சிக்கடைகள் ஆகியவற்றை 1984ம் ஆண்டு தை மாதம் 1-ந் திகதி தொடக்கம் 1984-ம் ஆண்டு மார்கழி மாதம் 31ந் திகதி வரை குத்தகைக்கு/வாடகைக்கு விற்பனை செயவதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 7.11.83ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை யாழ். அபிவிருத்திச்சபைச் செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றிற்குரிய கேள்விப்பத்திரங்கள் அவ்வவ் உப அலுவலகங்களால் 3-11 83ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை வழங்கப்படும். மூலப்பிரதி யாழ். அபிவிருத்திச் சபை தலைமை அலுவலகத்திலும், இணைப்பிரதி உரிய அலுவலகத்திலும் 7-11-83 ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் பற்றிய முழுவிபரங்களையும், கேள்விப் பத்திரப் பெறுமதி, கேள்விப்பிணைத் தொகை ஆகிய விபரங்களையும் கீழ்க்காணும் உப அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தேவநேசன் நேசையா
யாழ். அபி. சபை அலுவலகம், செயலாளர்.
யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை.
06-10-83

## உப அலுவலகங்களின் பெயர்

| | | | |
|---|---|---|---|
| 01. | ஊர்காவற்றுறை | 28. | நெல்லியடி |
| 02. | மானிப்பாய் பட்டணம் | 29. | கிளிநொச்சி |
| 03. | உரும்பிராய் | 30. | கொக்குவில் |
| 04. | உடுப்பிட்டி | 31. | நல்லூர் - யாழ்ப்பாணம் |
| 05. | நாரந்தனை | 32. | தெல்லிப்பளை |
| 06. | மல்லாகம் | 33. | மயிலிட்டி |
| 07. | மானிப்பாய் கிராமம் | 34. | அச்சுவேலி |
| 08. | ஏழாலை | 35. | நீர்வேலி |
| 09. | உடுவில் சுண்ணாகம் | 36. | சுளிபுரம் |
| 10. | கோப்பாய் | 37. | புலோப்பளை |
| 11. | அனலைதீவு | 38. | நயினாதீவு |
| 12. | நெடுந்தீவு | 39. | வட்டுக்கோட்டை |
| 13. | வேலணை | 40. | மண்டைதீவு |
| 14. | எழுவைதீவு | 41. | அல்லைப்பிட்டி |
| 15. | காரைநகர் வடக்கு | 42. | புங்குடுதீவு |
| 16. | அராலி | 43. | பண்டத்தரிப்பு கிராமம். |
| 17. | காரைநகர் தெற்கு | 44. | புத்தூர் |
| 18. | கட்டைவேலி அல்வாய் | 45. | செம்பியன்பற்று |
| 19. | குடத்தனை | 46. | கச்சாய், கொடிகாமம் |
| 20. | நாவற்குளி | 47. | கைதடி |
| 21. | முள்ளிப்பற்று யக்கச்சி | 48. | மிருசுவில் |
| 22. | இரணைதீவு | 49. | வரணி கொடிகாமம் |
| 23. | புலோலி | 50. | சாவகச்சேரி |
| 24. | சங்கானை | 51. | பூநகரி பரந்தன் |
| 25. | பண்டத்தரிப்புபட்டணம் | 52. | பல்லவராயனகட்டு |
| 26. | காங்கேசன்றை | 53. | கரைச்சி |
| 27. | சுண்ணாகம் | 54. | முகமாலை |

(9267)

Personal Classes for
G. C. E. (A/L) 1984
தூய பிரயோக கணிதம்

பகல் நேர வகுப்பு ஆரம்பம்: நாளை

பிரிவு:I 8-00:காவிகள் 9-00:திரிகோணகணிதம் | பிரிவு:II 10-30: எறியம் 11-30:நுண்கணிதம்

ஆசிரியர் RAVIMOHAN

மணியம்ஸ் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(ஸ்ரீதர் சினிமா-நாகவிகாரை இடையில்)
(9336

# திருமணத் திருமுகம்

நிகழும் ருதிரோற்காரி வருடம் ஐப்பசி மாதம் 3-ம் நாள் (20-10-1983) வியாழக்கிழமை காலை 10-05 முதல் நண்பகல் 12-30 வரையுமுள்ள சுபவேளையில்

| | |
|---|---|
| எமது கனிஷ்ட புதல்வன்<br>திருவளர் செல்வன்<br>ஸ்ரீதரன் அவர்களுக்கும்<br>(இளஞ்சைவப் புலவர்) | எமது கனிஷ்ட புதல்வி<br>திருவளர் செல்வி<br>சத்தியபாமா<br>அவர்களுக்கும் |

மணமகளில்லத்தில் திருமணம் செய்துவைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடுமப சகிதம் வருகை தந்து புதுமணமக்களை ஆசீர்வதித்து நல்வாழ்த்துக்கூறும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்

திரு. வே. இராசையாவும்
(இளைப்பாறிய உப தபாலதிபர்,
நாச்சிமார் கோயிலடி)
பாரியாரும்
581/1, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

திரு. அ. மயில்வாகனம் அவர்கள்
(இளைப்பாறிய தனியார்துறை லிகிதர்)
123/3, அம்பலவாணர் வீதி
அத்தியடி, யாழ்ப்பாணம்.
(9361)

## - இந்தியாவின் உறுதிப்பாட்டைக் குலைக்க -

# தீயசக்திகள் வன்முறையில் ஈடுபடுகின்றன!

### மக்களை விழிப்புடன் இருக்குமாறு

## இந்திரா எச்சரிக்கிறார்

புதுடில்லி, அக். 17

''புதுடில்லியிலும் மற்றும் ஏழு இடங்களிலும் சமீபத்தில் இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்கள் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும். நாட்டின் உறுதிப்பாட்டையும், ஒற்றுமையையும் குலைக்கச் சிலதீயசக்திகள் வன்முறை நடவடிக்கைகளிலீடுபட்டுள்ளன''.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி நேற்றுப் புதுடில்லியிலுள்ள காந்தி மைதானத்தில் இடம்பெற்ற விஜயதசமி வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''புதுடில்லியில்இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது அப்பாவி மக்கள்கொல்லப்பட்டுள்ளனர். இத்தகைய வன்முறைச்சம்பவங்கள் மீண்டும் நிகழாதவாறு மக்கள் பார்த்துக்கொள்ளவேண்டும்.

''மதத்தின் பெயரால் நடக்கும் மோதல்கள் முடிவுக்குவர வேண்டும். ஏனைய மதத்தவர்களின் மதஉணர்வுகளைப் புண்படுத்தக்கூடிய சம்பவங்களில் மக்கள் ஈடுபடக்கூடாது.

''ஒற்றுமைக்கும் சமாதானத்திற்குமாக உழைக்க மக்கள் முன்வரவேண்டும். மதம், பிராந்தியம், மொழி என்ற பெயரில் பிரிவினையை ஏற்படுத்த முயலும் தீயசக்திகளை மக்கள் நிராகரிக்கவேண்டும்'' என்றார்.

இவ்வைபவத்தில் பல்வேறு பட்ட சமூகத்தைச் சேர்ந்த மக்களும்கலந்து கொண்டனர். (வெ)

## சர்வதேச அபிவிருத்தி நிதி வசதிகள் திருத்தி அமைக்கப்பட வேண்டும்!

### ஐ. நா. பொருளாதார சபைக்குத் தீர்மானம்

நியூயோர்க் அக். 17

தற்போதைய சர்வதேச அபிவிருத்தி நிதிவசதிகள் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்று தீர்மானம், ஐ. நா. பொருளாதார சமூகசபைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்தியப்பிரதிநிதி திரு.இராமச்சந்திரன் இத்தீர்மானத்தை பொருளாதார சபைக்கு சமர்ப்பிக்கவுள்ளார்.

இன்றைய சர்வதேச நிதி வசதிகள் வளர்ந்த நாடுகளுக்கு சார்பாகவே உருவாக்கப்பட்டுள்ளன. இதனால் வளரும் நாடுகள் தமது அபிவிருத்திக்குத் தேவையான நிதிகளில் குறைந்தபட்ச தேவையைக் கூட பூர்த்திசெய்யமுடியவில்லை. அத்துடன் இந்நிதி வசதிகள் முற்றாகவே திருத்தப்படவேண்டுமென்றும் இத்தீர்மானம் குறிப்பிடுகிறது.

இத்தீர்மானத்தை நிறைவேற்ற ஐ நா. சபையில் அண்மையில் கூடிய பல நாடுகளும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தன. சில கருத்து வேறுபாடுகள் காணப்பட்டபோதும் பொதுவாக இத்தீர்மானம் எல்லா நாடுகளினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. (சூ-வெ)

## இந்திய பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல்!

### ஜனாதிபதி எச்சரிக்கிறார்

புதுடில்லி, அக். 17

''ஒருவர் மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதுடன், அவர்களின் உணர்ச்சிகளையும் மதித்து நடக்கவேண்டும்''.

இவ்வாறு இந்திய ஜனாதிபதி திரு. ஸெயில்சிங் புதுடில்லியில் இடம்பெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்:

''இந்தியாவின் பாதுகாப்பிற்கு இன்று பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும். அண்மையில் புதுடில்லியிலும், ஏனைய இடங்களிலும் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்கள், நாட்டின் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் நோக்கத்துடன் சில தீயசக்திகளால் மேற்கொள்ளப்பட்ட செயல்களாகும்'' என்றார். (வெ)

### பார்க்கின்ஸன் ராஜிநாமா எதிரொலி!

## பிரிட்டிஷ் அமைச்சரவையில் மாற்றம்!

லண்டன், அக். 17

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாக்கிரட் தட்சர் அமைச்சரவையை மாற்றியமைத்துள்ளார்.

பிரிட்டனின் கைத்தொழில், வர்த்தக அமைச்சர் திரு. சிசில் பார்க்கின்ஸன் தமது பதவியிலிருந்து ராஜிநாமாச் செய்ததையடுத்தே இம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பிரிட்டனின் வேலைவாய்ப்பு அமைச்சர் திரு. நோர்மன் பிலிப் புதிய கைத்தொழில், வர்த்தக அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரிட்டனின் போக்குவரத்து அமைச்சர், நிதியமைச்சர் ஆகியோரின் பதவிகளிலும் மாற்றங்கள் செய்யப்பட்டு, இவர்களுக்கும் வேறு அமைச்சுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. பார்க்கின்ஸன் தமது பெண்செயலாளருடன் கொண்டிருந்த இரகசியஉறவு அம்பலமானதையடுத்து ஏற்பட்ட நெருக்கடி நிலையினால் அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்தது தெரிந்ததே. (வெ)

## காந்தி காமராஜ் காங்கிரஸ் ஜனதாவுடன் இணைந்தது

சென்னை, அக். 17

திரு. குமரி அனந்தன் தலைமையிலான காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் நேற்று ஜனதா கட்சியுடன் இணைந்தது.

இது தொடர்பாக திருச்சிராப்பள்ளியில் நேற்று இடம்பெற்ற வைபவமொன்றில் ஜனதா கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர், காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் தலைவர் திரு. குமரி அனந்தன், ஜனதாக்கட்சியின் தமிழ்நாடுதலைவர் திரு. நெல்லைஜெபமணி ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இந்த இணைப்பினால் தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஜனதாகட்சியின் வலு இரண்டிலிருந்து ஐந்தாக அதிகரித்துள்ளது.

காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் 1978ம்ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது தெரிந்ததே. (வெ)

### இடம்பெயர்ந்த ஆசிரியர்கள்

## மேலும் விபரங்கள் சேகரிக்க இ.த.ஆ. சங்கம் தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு நிரந்தர இடமாற்றத்தினைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் மேலும் விபரங்களைச் சேகரிப்பதற்காக அவர்களை இன்றுதொடக்கம் இம்மாதம் 21ம் திகதிவரை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். பணியகத்துக்கு வருமாறு சகல இடம்பெயர்ந்த ஆசிரியர்களும் கேட்கப்பட்டுள்ளனர்.

இன்று காலையில் சிலாபம், புத்தளம், கேகாலை, கம்பஹா ஆசிரியர்களும், மாலையில் திருகோணமலை, மாத்தளை, இரத்தினபுரி ஆசிரியர்களும், நாளைக் காலை கொழும்பு மாவட்டப் ஆசிரியைகளும, மாலையில் ஆசிரியர்களும், 20ம் திகதி காலையில் பண்டாரவளை, கண்டி ஆசிரியைகளும், மாலையில் ஆசிரியர்களும், 21ம் திகதி காலையில் நுவரெலியா மாவட்ட ஆசிரியைகளும், மாலையில் ஆசிரியர்களும் விபரங்களைக் கொடுக்கலாமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(நயினை நிருபர்)

### கொள்ளையர்களை மடக்கிப்பிடிக்க

## பொதுமக்கள் ஒத்துழைப்பை பொலிஸ் அதிகாரி நாடுகிறார்

(மாவிட்டபுரம்)

''பல கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக கொள்ளையர்களை பொதுமக்கள் பிடித்து எம்மிடம் ஒப்படைத்துள்ளனர். இதேபோல பொதுமக்கள் எம்முடன் ஒத்துழைத்தால் கொள்ளைச் சம்பவங்கள் ஒழிந்துவிடும்'' என்று காங்கேசன்துறை பொலிஸ் குற்றத் தடுப்பு அதிகாரி உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஆர். ஜெயபாலன் பொதுமக்களைக் கோரியுள்ளார்.

''காங்கேசன்துறைப் பகுதியில் கொள்ளைச் சம்பவங்கள் மலிந்துள்ளன. இக்கொள்ளைச் சம்பவங்கள் பலவற்றில் சம்பந்தப்பட்டவர்களை பொதுமக்கள் பிடித்து எம்மிடம் ஒப்படைத்துள்ளனர். இதேபோல பொதுமக்கள் எம்முடன் ஒத்துழைத்தால் நாம் கொள்ளைச் சம்பவங்களைத் தடுக்கலாம். பொதுமக்களுக்கும் பொலிசாருக்கும் இடையில் நல்லுறவு நிலவவேண்டும். அந்த நல்லுறவின்மூலம் கொள்ளைச்சம்பவங்களைகுறைக்கலாம்'' என்றும் அவர் கூறினார்.

காலியிலிருந்து காங்கேசன் துறைக்கு குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரியாக திரு. ஆர். ஜெயபாலன் வந்தபின்னர் பல கொள்ளையர்களை கைதுசெய்து கொள்ளைகளை துப்புத்துலக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

### மணிப்பூரில் வெள்ளப்பெருக்கு

புதுடில்லி, அக். 17

மணிப்பூரில் கடந்த சில நாட்களாகப் பெய்துவரும் பலத்த மழையினால் அங் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுளது. (வெ)

### கலைமகள் விழா

(பண்டத்தரிப்பு)

உடுவில் கமநலச்சேவை நிலையத்தில் கலைமகள்விழா சடந்த வெள்ளிக்கிழமையன்று பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி. கைலாசபிள்ளை தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கமக்கமழு உறுப்பினர்கள், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

# ''புதிய தகவல்துறை அமைப்பு: கொழும்பில் உறுதியான நிலை ஏற்பட்டது''

புதுடில்லி, அக். 17

''தகவல் போக்குவரத்து வளர்ச்சிக்கான சர்வதேசத் திட்டக் கவுன்ஸில் கூட்டம் அண்மையில் தாஷ்கந்தில் முடிவடைந்தது. அங்கு விவாதிக்கப்பெற்ற விஷயங்கள் ஆசியப் பிராந்தியத்தில் புதிய தகவல் துறை ஒன்றை நிறுவும் பணியுடன் உடனடித் தொடர்பு கொண்டதாகும்'' என்று ஆசிய செய்தி ஏஜன்ஸி நிறுவனத்தின் தலைவர் அஹ்மத் முஸ்தபா ஹஸன் கூறினார்.

''எமது செய்தி நிறுவனத்தின் ஆரம்பகாலப் பணிகள் எளியநிலையில் இருந்தன. 1951ல் எட்டுச் செய்தி நிறுவனங்கள் எங்களுடன் தொடர்பு கொண்டு தபால்மூலம் தகவல்களைப் பரிமாறின. 1981ல் கொழும்பு நகரில் எமது பணிகளுக்கு மேலும் உறுதியான அடிப்படை ஏற்பட்டது. தந்திச் செய்திகளைப் பரிமாறிக் கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டது. இப்பொழுது துருக்கி, இந்தியா, மங்கோலியா, வியட்நாம், இந்தோனேஷியா, சோவியத் யூனியன் மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்த 24 செய்தி ஏஜன்ஸிகளுக்கு எமது நிறுவனம் பிரதிநிதியாக உள்ளது. பசுபிக் பிராந்தியத்தில் ஒரே தேசிய செய்தி ஏஜன்ஸி இன்னும் இல்லாதது வருந்தத்தக்கது.

''எமது பணியின் வடிவங்களையும், முறைகளையும் நாங்கள் மென்மேலும் அபிவிருத்தி செய்துவருகிறோம். எமது நிறுவனத்திலுள்ள ஏஜன்ஸிகள் பல்வேறு சமுதாய அமைப்புள்ள நாடுகளைச் சேர்ந்தனவாக இருப்பதால், அந்த நாடுகளின் அரசியல் கண்ணோட்டத்தைப்பற்றிக் கவலைப்படாமல் எமது தொழில் ரீதியான விஷயங்களிலேயே நாங்கள் அக்கறை காட்டுகிறோம். ஒரு நிகழ்ச்சிபற்றிய செய்தியைச்சேகரிப்பதில் உயர்ந்தபட்ச நடுநிலைமையைக் கடைப்பிடிக்கிறோம். சுருங்கச் சொன்னால், முக்கிய உலக நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகளில் நாங்கள் ஒரு சமசீரான அணுகுமுறையை அடைந்துள்ளோம்''

''இந்தப் பிராந்தியத்தில் சமநிலையற்ற செய்திப்போக்குவரத்தை விரைவில் அகற்றல், தகவல்களை வழங்குவதற்கான வாய்ப்புகளிலுள்ள ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதல், இவற்றில் ஈடுபட்டுள்ள எமது நிறுவனத்திற்குத் தேவையான ஆதரவு தொடர்ந்து தரப்பட வேண்டும் என்று தாஷ்கந்து கூட்டத்தில் கேட்டுக்கொண்டேன்'' என்று அஹமத் முஸ்தபா ஹஸன் கூறினார்.

### பொலிஸ் சூட்டில் நால்வர் பலி

புதுடில்லி, அக். 17

மகாராஷ்டிரத்தில் வன்முறைக் கும்பலொன்றைக் கலைப்பதற்காகப் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தபோது 4 பேர் பலியானார்கள்.

கடைகளைச் சேதப்படுத்தி, கொள்ளையிலீடுபட்ட வன்முறைக் கும்பலைக் கலைப்பதற்கு பொலிசாரினால் துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டபோதே 4 பேர் பலியானதாகக் கூறப்பட்டது.

மகாராஷ்டிரத்திற்குக் கூடுதலான பொலிசார் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். தற்போது அங்கு நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வெ)

### பனை ஓலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

(புலோலி)

கூட்டுறவுத் திணைக்களத்தின் கீழ் முதலாவதாக அமைக்கப்பட இருக்கும் பனை ஓலைத் தொழில் உற்பத்தியாளர்களுக்கான கூட்டுறவுச்சங்கம் ஒன்று மண்டைதீவுக் கிராமத்தில் ஆரம்பித்து வைக்கப்பட இருக்கிறது.

இம்மாதம் 19ம் திகதி இப் பனை ஓலை உற்பத்தியாளர்களுக்கான கூட்டுறவுச்சங்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட உள்ளது. பனை அபிவிருத்திச் சபையின் ஆலோசனையை தொடர்ந்து கூட்டுறவு ஆக்க (பனம் பொருள்) உதவி ஆணையாளர் திரு எஸ்.வேலாயுதம் பிள்ளை இக் கூட்டுறவுச் சங்கத்திற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றார்.

## மணிவாக்கு

நேற்று என்பது ஒரு கனவே
நாளை என்பது ஒரு தொலைத் தோற்றமே
ஆனல் செறிவாக வாழப்படும் இந்நாள்
ஒவ்வொரு வருகின்ற நாளையும் நம்பிக்கையூட்டும்
தொலைத் தோற்றமாக ஆக்க இயலும்.

— உபநிடதம்.

# நமது நோக்கு

## வள்ளுவன் விவகாரம்

'வள்ளுவன் தன்னை
உலகினுக்கே தந்து,
வான் புகழ் கொண்ட
தமிழ்நாடு'

என்று பாரதியார் போற்றிய தமிழ் முனிவரைப்பற்றிக் கேள்விப்படாத தமிழர் எவருமிலர்.

தமிழர் மட்டுமல்ல முனிவர் உலகினுக்கே உரியவரானமையால் பல்வேறு தேசங்களிலும் மொழிகளிலும் திருக்குறள் படிக்கப்படுகிறது.

உலகின் மிகப் பெரிய இருவர் தமிழைப் படிக்க முயன்றது குறளைப்படிக்க வென்ருல் வள்ளுவனின் புகழ் வானளாவியது உறுதி. ஒருவர் மகாத்மாகாந்தி; மற்றவர் கலாநிதி அல்பேட் சுவீட்சர்.

எங்கள் நாட்டின் துரதிர்ஷ்டமும் இங்கே குறிப்பிடவேண்டியது எமது கடமையாகும்.

இந்த ஆட்சி ஆரம்பமான காலத்தில் கல்வித்துறைக்கு அமைச்சராயிருந்த கலாநிதி நிஸங்க விஜயரத்ன திருக்குறளின் பெருமை அறிந்தவராகையால் அதனை சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து (நல்ல மொழிபெயர்ப்பு இன்று உண்டு) பாடசாலைகள் அனைத்திலும் திருக்குறள் கட்டாய பாடமாக்க நடவடிக்கைகள் எடுக்க முயன்ருர். நாட்டின் தவக்குறைவு, மந்திரிசபை மாற்றத்தில் அவர் கல்வி அமைச்சை விட்டு வெளியேறியதும் இந்த அருமந்த திட்டம் கைவிடப்பட்டது.

சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் எழுதிய பாட்டுக்களே திருக்குறள் என்று அறிஞர் பலர் கருதுகின்றனர்; ஒரு காலத்தில் எழுதியது அநேகமாக மற்ருெரு காலத்துக்குப் பொருந்தாது. ஆயினும் சில விஷயங்கள் எக்காலத்துக்கும் உண்மை; அதிலும் சில மேதாவிகளின் கருத்துக்கள் பல்லாண்டுகள் கழிந்தும் உண்மையாகவே நிற்கும் கருத்துக்களாக இருக்கும்.

முனிவர் வள்ளுவரின் வாசகம் இத்தகையது.

இந்த உண்மையைக் கருத்தில் கொண்டுபோலும் பிரபல ஆங்கில அறிஞர் தொமஸ் கார்லைல் (Carlyle) ஷேக்ஸ்பியர் பற்றிக் கூறியதும் நினைவுக்கு வருகின்றது.

''நாம் இந்தியாவை இழந்தாலும் இழப்போம்; ஆனல் எங்கள் ஷேக்ஸ்பியரை ஒருபோதும் இழக்கோம்''.

வள்ளுவன் கூற்றில் அதிகம் எழுத எமக்குக் காரணமில்லாமலில்லை.

அண்மையில் எமது நாட்டின் பத்திரிகைகளிலும், வானெலியிலும், தொலைக்காட்சியிலும் இன்னெரு வள்ளுவன்பற்றி தடல்புடலாக பேசப்பட்டதும் எழுதப்பட்டதும், அவரை ரூபவாகினியில் கண்டும் அவருடைய இன்மொழிகளைக் கேட்டும் ரசித்த இந்நாட்டு மக்கள் பெரிய வள்ளுவன் கூற்றுக்கும் 'சின்ன' வள்ளுவன் விவகாரத்துக்கும் வேறுபாடுகாணும் ஆற்றல் உடையவர்களா?

தமிழ் முனிவர் வேறு, 'எங்கள் வள்ளுவன்' வேறு. முந்தியவர் அனைத்துலகின் சொத்து; பிந்தியவர் இலங்கை அரசின் அரிய 'கண்டுபிடிப்பு'.

பாவம் இலங்கை மாணவன் வள்ளுவன் இலங்கை அரசின் 'ஒற்ருகச்' செயற்பட வேண்டிய நிர்ப்பந்தம் தெய்வப் புலவர் திருவள்ளுவரின் திவ்விய கருத்துக்கு நேர்மாருய் அமைந்தது.

'சிறப்பு அறிய ஒற்றின்கண்
செய்யற்க செய்யின்
புறப்படுத்தான் ஆகும்
மறை'

என்கிருர் வள்ளுவர்.

'ஒற்றருக்குச் சிறப்புச் செய்தால் பிறர் அதன் காரணத்தை விசாரிப்பார்கள்; பின்னர் ரகசியம் வெளிப்படும். அதுவெளிப்பட்டால் ஆட்சிக்குக் கெடுதலாய்முடியும். பத்திரிகைகள் நடத்திய பிரசாரம் இதனைப் புஸ்வாணமாக்கவே உதவும்.

தலைமன்னரில் கைதுசெய்யப்பட்டு, தள்ளாடி இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு பின்பு பலாலி முகாமுக்கு, அதன் பின்னர் ஆனையிறவுக்கும், பின்பு கொழும்புக்கு கொண்டு போனது ராணுவத்தின் கடமையாகலாம்.

கொழும்பில் வள்ளுவனுக்குக் கிடைத்த சிறப்பு வரவேற்பு, பொய்யாமொழிக்குப் பொருத்தமானதா?

ஆட்சியாளர் அனைவருக்கும் திருக்குறள் கட்டாய பாடமாக்கப்பட வேண்டும்.

## குடிநீர்க் கஷ்டம் நீங்கியது

(புலோலி)

துன்னலை தெற்கு கலிகைக் கந்தன் கிராம முன்னேற்றச் சங்கம் குடி தண்ணீர் இன்றி அவதியுற்ற கிராம மக்களுக்கு உதவும் முகமாகக் கவனிப்பாரின்றி இருந்த குடிதண்ணீர் கிணறு ஒன்றைச் சிரமதானம் மூலம் திருத்திப் புனரமைத்துள்ளது.

இதன்மூலம் இக் கிராமத்தவர்களும், கரவெட்டி கிழக்குக் கிராம மக்களுக்கும் குடி தண்ணீருக்காக நீண்டதூரம் அலைய வேண்டிய கஷ்டம் நீங்கியுள்ளது. (சூ)

## பதவிஉயர்வு

(வவனியா)

முப்பது ஆண்டு காலமாக சேவை புரிந்த முதலியார் முதலாம்தர நீதிமன்ற முதலியாராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

வவனியா மாவட்ட நீதிமன்றத்தில் கடமை புரிந்த முதலியார் திரு. கிருஸ்ண பிள்ளை சுப்பிரமணியம் என்பவருக்கு நீதிச்சேவை ஆணைக்குழு குறித்த பதவி உயர்வினை வழங்கியுள்ளது.



# ஐயாறன்

சில மாதங்களின் முன் ஒருநாள் 'சைவப் பழங்கள்' சிலர் 'ஈழநாடு' காரியாலயம் வந்து 'ஹரனைப் பார்க்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டபோது, எமது ஹரன் ஐயா 'மறைந்தும் மறையாத' பெருமையை நாம் உணர்ந்தோம்.

இன்னும் எத்தனையோ பேர் ஹரன் ஐயா தான் இப்பவும் 'ஈழநாடு' ஆசிரியர் என்று நம்பிக்கொண்டிருக்கிருர்கள். சிலபேர் இப்போதும் அவர் சுகம்பற்றி விசாரிக்கின்றனர்.

ஒருவகையிலே பார்க்கப்போனல் இப்பவும் அவர் தான் 'ஈழநாடு' ஆசிரியர் என்று சொல்லலாம். அன்று அவர் வகுத்த பத்திரிகைக் கொள்கைக் கோட்டில் தான் இன்றும் 'ஈழநாடு' இயங்கிவருகிறது.

இன்று இந்நாட்டின் பத்திரிகைகள் சடைப்பிடிக்கும் கோணல் நோக்கங்களையும், குறுகிய இலக்குகளையும் கவனிக்கும்போது ஆசிரியர் ஹரனின் உள்ளத்தைக் கவர்ந்த இலட்சியம் நினைவுபடுத்தற்குரியது.

''சுயநலப் பற்றற்று நாட்டிற்கு நற்பணிபுரியும் பரந்த மனப்பான்மையுடன் பத்திரிகையாளன் செயற்படும்போதுதான் பத்திரிகைகள் நாட்டுக்குப் பயனுள்ள சேவை செய்யமுடியும்.''

மகாத்மாகாந்தியின் தாரக மந்திரம் இது. அவரே தமது இலட்சிய பத்திரிகையாளர் என்று அமரர் ஹரன் அடிக்கடி கூறுவதுண்டு.

தெலுங்கைத் தாய்மொழியாகக்கொண்ட ஹரன் ஐயா அவர்கள் தாம் ஓர் எழுத்தாளராகத் திகழவேண்டுமென்று உறுதி பூண்டு தமிழைப் படித்துப் பாண்டியத்தியமடைந்து தமிழகத்தில் பத்து வருடமும், கொழும்பில் இருபது வருடமும், யாழ்ப்பாணத்தில் 20வருடமும்பத்திரிகையாளராயிருந்து ஆசிரியத் தலையங்கத்தின் மூலமும் 'ஐயாறன்' என்ற கலம் மூலமும் தமிழர் சமுதாயத்திற்கும் நாட்டுக்கும் அளப்பரிய தொண்டாற்றினுர். ஐயா மறைந்து இன்று ஆண்டுகள் இரண்டு முடிந்தனவெனினும், ஆசிரியர் ஹரனுகவும் ஐயாறனுகவும் அவர் நினைவு எமது நெஞ்சை நிறைத்துள்ளது.

ஐயாவின் நாமம் வாழ்க.
- சசிபாரதி

## தென் பகுதி பல்கலைக்கழகங்களும்

# தமிழ் மாணவர் நிலையும்

கடந்த 4ம் திகதி 'ஈழநாடு' இதழில் யாழ்ப்பாணத்திற்கு ஒரு பூரண பல்கலைக்கழகம் என்ற தலைப்பில் திரு. ச. அம்பிகைபாகன் எழுதிய கட்டுரையை வாசித்தபின்னர் தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களில் இருந்து இடம்பெயர்ந்த மாணவர்களின் பிரச்னைகளை இங்கு குறிப்பிடலாம் என எண்ணுகின்றேன்

இலங்கை சுதந்திரம் பெற்றபின் 30 ஆண்டு கால சரித்திரத்தில் கடந்த ஆடி மாதக் கலவரத்திற்கு முன் நடைபெற்ற கலவரங்களில் மாணவர்கள் என்ற ரீதியில் சிங்கள, தமிழ் பட்டதாரி மாணவர்களிடையே ஒற்றுமையும் ஒருவருக்கொருவர் உதவும் மனப்பான்மையும் இருந்துவந்தது. கடந்த 77ம் ஆண்டுக் கலவரத்தின் போது பேராதனைப் பல்கலைக் கழகததில் தமிழ் மாணவர்கள் சிங்கள மாணவர்களினுல் காப்பாற்றப்பட்டு. தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டது மிகச் சிறந்த உதாரணமாகும்.

ஆனல், தற்போதுள்ள நிலைமை என்ன? நாட்டில் அமைதி நிலவிய காலத்தில் கடந்த மே மாதம் 11ம் திகதி இரவு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்கள் திட்டமிட்ட முறையில் சிங்கள மாணவர்களினுல் தாக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் சென்று படிக்கும்படி மிரட்டப்பட்டார்கள்.

இதைத் தொடர்ந்து தமிழ் மாணவர்கள் அனைவரும் அடுத்த நாட் காலையே தமது சொந்த இடங்களுக்குத் திரும்பினுர்கள். இச்செயல்களுக்குப் பல்கலைக்கழக நிர்வாகம் எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் அசட்டையாகவே இருந்தது. பின்னர், உயர் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஸ்ரான்லி கல்பகேயையும், பேராதனைப் பல்கலைக் கழக உப வேந்தரையும் சந்தித்தது அவர்கள் எமக்குப் பாதுகாப்புத் தரப்படுமென உறுதியளித்ததற்கிணங்க ஆனி மாதம் 1ம் திகதி பல்கலைக்கழகத்திற்குத் திரும்பினுர்கள். ஆனல், அங்கு திரும்பவும் தமிழ் மாணவர்கள் தாக்கப்பட்டும், தமிழ் மாணவர்களின் அறைகளுக்குப் பெற்ருேல் குண்டுகள் வீசப்பட்டும், தமிழ் மாணவர்களின் உடைமைகள் சேதமாக்கப்பட்டன. இத்தருணத்தில் முற்போக்குச் சக்திகளின் கையில் இருக்கும் மாணவர் சங்கத் தலைவர்கள் பல்கலைக்கழகத்தை உடன் மூடுமாறு பலமுறை கோரினர். அதற்கு நிர்வாகம் இனவாதம் தொனிக்கும் பதில்களைக் கூறியதுடன் அவர்களின் கோரிக்கைகளையும் நிராகரித்தது. இச்சம்பவங்களினுல் ஆனி மாதம் 20ம் திகதிவரை பல்கலைக்கழகத்தில் பதட்ட நிலையே நிலவியது. அத்துடன் தமிழ் மாணவர்களைத் தாக்கினுர்கள் என்பதற்காக விரிவுரையாளர்களினுல் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்ட சிங்கள மாணவர்கள் இருவரை, சில சிங்கள, தமிழ் விரிவுரையாளர்களின் கோரிக்கைகளின் பேரில் பல தயக்கங்களுக்குப் பின்னர் நிர்வாகம் இடை நிறுத்தியது.

### மக்கள் கருத்து

இடை நிறுத்தப்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் பீடத்தைச் சேர்ந்த சிங்கள மாணவர்கள், இடை நிறுத்தப்பட்டவர்களைத் திரும்பவும் எடுக்கும்படி கோரி விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர். இப்பகிஷ்கரிப்பின் போது தமிழ் மாணவர்களும் விரிவுரைகளைப் பகிஷ்கரிக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். பின்னர் நிர்வாகம் ஒருவாரத்தின்பின் இடைநிறுத்திய மாணவரை திரும்பவும் எடுத்தது.

இச்சம்பவம் ஒன்றே தமிழ் மாணவர்கள் தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களில் சுதந்திரமாக இயங்கமுடியாது என்பதற்கு மிகச் சிறந்த உதாரணமாகும். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தாக்குதல் சம்பவங்களுக்கு சில சிங்கள விரிவுரையாளர்களும் ஆதரவாக இருந்தார்கள் அதே நேரத்தில் தமிழ் மாணவர்களுக்கு மனிதாபிமான ரீதியில் சில சிங்கள விரிவுரையாளர்களும் முற்போக்கு எண்ணம் கொண்ட சிங்கள மாணவர்களும் உதவிசெய்தார்கள்.

மொறட்டுவப் பல்கலைக்கழகத்திலும் கடந்த ஆனிமாத முற்பகுதியில் தனியார் வீடுகளில் இருந்த தமிழ் மாணவர்கள் காடையர்களினுல் தாக்கப்பட்டும் மிரட்டப்பட்டும் பாதிப்புக்குள்ளானுர்கள். பல்கலைக்கழக நிர்வாகம் உடனடியாக விடுதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது. ஆனல் கடந்த ஆடிமாதக் கலவரத்தின்போது நிர்வாகமே அவர்களைப் பாதுகாக்க முடியாது என்ற நிலைமையில் அகதிகள் முகாமில் சேர்க்கப்பட்டனர். இக்கால கட்டத்தில் தமிழ் மாணவர்களின் குறிப்புகள், புத்தகங்கள், உடைமைகள் எரிக்கப்பட்டு. சேதமாக்கப்பட்டன. தமிழ் மாணவர்களுக்கு உதவி செய்யும் ஆர்வமுள்ள முற்போக்கு எண்ணமுள்ள சிங்களமாணவர் ஒருவரும் குத்திக்கொலை செய்யப்பட்டார். இனவெறியர்களினுல் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

கொழும்புப் பல்கலைக் கழகத்திலும் மருத்து பீட மாணவர்கள் கடந்த கலவரத்தின்போது தாக்கப்பட்டதால் 2 நாட்களாக கூரை 'சீற்றுக்குள்' ஒளித்திருந்தார்கள். அவர்களின் உடமைகளும் சேதமாக்கப்பட்டன.

இவையாவும் பட்டதாரி மாணவர்கள் இதுவரை காலமும் அனுபவித்து வந்த இன்னல்களாகும். இப்படிப்பட்ட நிலைமைகளில் பல்கலைக்கழகங்களும் நாடும் இருக்கும்போது மாணவர்கள் எப்படி அங்கு சென்று கல்விகற்று தமது இலட்சியத்தை அடைய முடியும்! கல்வி கற்பது என்பது அதுவும் உயர் கல்வி கற்பது என்பது மனம் அமைதியான நிலையில் நிம்மதியாக இருந்து மனத்தில் எதுவித பதட்டமும் இல்லாத நிலையில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றுஆகும். ஆனல் அந்த நிலைமை தற்போது தென்னிலங்கைப் பல்கலைக் கழகங்களில் இல்லை தமிழ்மாணவர்கள் அங்கு சுதந்திரமாக இயங்கமுடியாத நிலையில் இருக்கின்ருர்கள்.

இடம்பெயர்ந்த பல்கலைக் கழக மாணவர்களுக்கு பிற நாடுகளில் கல்வி பயிலுவதற்கு சிலர் நடவடிக்கை எடுத்து வருகின்ருர்கள் தற்போது இருக்கும் 1800 தமிழ் மாணவர்களின் பிரச்சினைகள் தீர்த்துவிட்டால் போதுமா? இனிப் பல்கலைக்

(5-ம் பக்கம் பார்க்க)

# இணுவில் சிவகாமியம்மை இன்று தங்க விமான பவனி

ஆலய வழிபாடு ஆன்மீக ஈடேற்றத்துக்கு இன்றியமையாதது. ஆலயத்தை மையமாக வைத்தே நமது கலை கலாசாரம் பண்பாடு அனைத்தும்வளர்க்கப்பட்டன. ஆண்டவன்மீது அசையாத நம்பிக்கை கொண்டு இடையருது சிந்தித்து வந்திருப்போமானுல் இக, பர சுகங்களைப்பெறலாம்.

ஆலயத்தில் நடைபெறும் வைபவங்கள் வெறும் கேளிக்கையல்ல. அபிஷேகம், பூஜை, அர்ச்சனை, ஹோமம் ஆகியவை எமக்கு மனஅடக்கத்தையும் சாந்தியையும் இறையருளையும் தரவல்லவை. அத்துடன் மக்கள் தாம் தாம் விரும்பும் பேரின்பங்களைப் பெறுவதோடு ஆன்மஈடேற்றத்திற்கும் வழிவகுக்கின்றன அபிஷேக பூசை ஆகியவற்றோடு அர்ச்சனையும் நித்திய வழிபாட்டில் முக்கிய கருமமாக இடம்பெறுகிறது. இறைவனது நாமங்களை மலர்கள் தூவிக் கூறுவதே அர்ச்சனையாகும். தேவரும் மூவரும் நாம்விரும்பிப் பூஜிக்கும் தெய்வமும் ஹோமத்தில்வந்து அவிர்ப்பாகம் பெறுவதாகச் சாத்திரங்கள் கூறுகின்றன.

அபிஷேகம், அர்ச்சனை ஹோமம் மகா விஷ்ணு, நாரதர் ஆகியோரும், வனவாசம் இருக்கையில் பஞ்சபாண்டவர்களும், மானுடர் பலரும் முறைப்படி செய்தும் செய்வித்தும் நற்கதி அடைந்த வரலாறுகள் பல உள்ளன.

இத்தகைய அபிஷேக பூஜை, அர்ச்சனை, ஹோமம் ஆகியவற்றை இணுவில் இந்து மகா சபை உலகினதும் நாட்டினதும் குறிப்பாக தமிழ்ச் சமுதாயத்தினதும் தமது ஊரினதும் நலனைக்கருதி நாடு செழிக்க வேண்டும்: எல்லோரும் இன்பமாக வாழவேண்டுமென்ற பொதுநோக்கோடு ஆண்டுதோறும் நவராத்திரி விழா இறுதி நிகழ்ச்சியாக இணுவில் சிவகாமி அம்மன் ஆலயத்தில் மிகவும் பிரமாண்டமான முறையில் சிவாச்சாரியமணி சிவஸ்ரீ வை. சபாரத்தினக் குருக்களை பிரதமசிவாச்சாரியராக ஒன்பது சிவாச்சாரியர்கள் மூலம் நவகலசஅபிஷேகம் நவசக்தி பூஜை நவசக்தி அர்ச்சனை நவசக்திஹோமம் நடத்தி வருகின்றனர். வழமைபோல் இன்றுமிவை நடைபெற்று தொடர்ந்து நவராத்திரி நாயகியாம் அன்னை சிவகாமி நவதுவார தங்க விமானத்தில் ஆரோகணித்து அருட்காட்சி கொடுக்கிருள். அனைவரும் கலந்து உலக தமிழ்சமூக நலனுக்கு பிரார்த்திப்போமாக.

தி. சி. சண்முகலிங்கம்,
(பொதுச்செயலாளர்,
இணுவில் இந்துமகாசபை)

## அணைக்கட்டு புனரமைப்பு

(புலோலி)

சிறிய நீர்ப்பாசன வேலைத் தெற்கு நுணுவில்குளம் அணைக்கட்டுப் புனரமைப்பு வேலைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இவ் அணைக்கட்டுப் புனரமைப்பு வேலைகளைத் துன்னாலை தெற்கு கலிகைக்கந்தன் கிராம முன்னேற்றச்சங்கம் பொறுப்பு ஏற்றுச் செய்து வருகின்றது. துன்னாலைதெற்கு கிராமசேவை அலுவலர் அணைக்கட்டு வேலையை ஆரம்பித்து வைத்தார்.

உடுப்பிட்டி எம் பி. திரு த. இராசலிங்கம் இந்த அணைக்கட்டு அமைப்புக்கெனப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் இருபதிணுயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தார். (சூ)

## கூட்டம்

(பண்டத்தரிப்பு)

சில்லாலை மத்தி கூட்டுறவு கடனுதவிச் சங்கத்தின் 28 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று சில்லாலை கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் யாழ். மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாஜ பிரதிநிதிகள் ஆகியோரும் இதில் கலந்துகொள்வார்கள்.

இதற்கான ஏற்பாடுகளை சங்க செயலாளர் திரு. புவனேஸ்வரன் கவனித்து வருகின்றார்.

## கூட்டம்

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அடுத்தமாதம் 2ம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை சங்கச் செயலாளர் திரு. எஸ். செல்வத்துரை மேற்கொண்டுள்ளா.

## தென்பகுதி...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கழகத்திற்கு தெரிவாகும் மாணவர்களின் நிலை என்ன? அவர்களால் தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களுக்குச் சென்று கல்விகற்க முடியுமா எனவே இவற்றுக்கெல்லாம் தீர்வாக மட்டக்களப்பு யாழ்ப்பாணத்தில் மேற்படி பல்கலைக் கழகங்களில் இல்லாத பீடங்களைச் ஸ்தாபித்து எமது கல்வியைத் தொடர வாய்ப்பளிப்பது தான் நிரந்தரத்தீர்வாக அமையும். இதற்கான நடவடிக்கைகளில் இறங்குவதை விடுத்து வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் இடம் பெயர்ந்த 1800 பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அனுமதி கோருவது என்பதுகேளிக்குரிய விடயமாகும்.

எல்லாப்பீடங்களையும் மட்டக்களப்பு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களில் உடனடியாக நிறுவுவது. சிரமம் என்ற காரணங்கள் கூறப்படலாம். ஆனுல் நாம் திரும்பிச்சென்று தென்னிலங்கை பல்கலைக் கழங்களில் எமது கல்வியை 3, 4 வருடங்களில் பூரணப்படுத்த முடியாது என்பது எல்லோரும் அறிந்த ஒன்று

எனவே 1 வருட காலதாமதம் ஏற்பட்டாலும் கூடத் தமிழர்களுக்கு பாதுகாப்பு எனக் கருதப்படும் தமிப்பகுதிகளில் பட்டதாரிமாணவர்கள் கல்வியைத் தொடர வழிசெய்வதைத்தவிர வேறுவழி ஒன்றும் இல்லை.

இடம்பெயர்ந்த
பல்கலைகக்கழக மாணவன்


Computer Programming Course
BASIC, COBOL, RPG. II

13-10-83-ல் நடந்த Scholarship பரீட்சையில் கீழ்க்காணும் மாணவர்களுக்கு DMS Electronics Ltd, ஆல் புலமைப்பரிசில் கிடைத்துள்ளது.

1. A. ராமநாதன் மே/பா அதிபர், அரசினர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்.
2. S. சிறீகரன், மே/பா S. குமாரவேலு, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.
3. குமுதினி செல்லத்துரை, மிஷன் பங்களா, மக்லியட் வைத்தியசாலை, இணுவில்
4. S. சாம்பசிவம், மே/பா. பரமநாதன், நுணுவில் கிழக்கு, சாவகச்சேரி.
5. P. V. ஜீவராஜ், 34, றக்கா லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
6. X. A. ரஜிந்தகுமார், 181, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
7. S. சீவநாயகம், 94, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.
8. A. குமாரருஜன், உடுவில் மேற்கு, சுன்னுகம்.
9. S. சுவேந்திரன், 159, 3 ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
10. S. வரதருஜா, நீலிப்பந்தானை, காரைநகர்.
11. S. ஸ்கந்தகுமார், 18/11, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம்.
12. K. சிலோன்மணி, கமலவாசம், கருவேலடிலேன், கொக்குவில்.
13. A. T. அருமைநாயகம், மே. பா. Dr. Mrs.A.C. கனகராசா வைத்தியசாலை, இணுவில்,
14. N. நிர்த்தனரூபன், புவனஸ்தான, நீர்வேலி.
15. N. சிவசக்திவேல், 271/2, நாவலர் லேன், யாழ்ப்பாணம்.
16. G. A. சர்மா, மங்கள பவனம், மூளாய் ரோட், வட்டுக்கோட்டை.
17. A சரவணபவானந்தன், ஐவானை, வலந்தலை, காரைநகர்.
18. U. N. சிவனுந்தன், நித்தியகல்யாணி, பலாலி ரோட், திருநெல்வேலிவடக்கு, யாழ்ப்பாணம்.
19. வே. சங்கரன், 19, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.
20. V. ஆனந்தன், திருத்தணி, மஞ்சத்தடி, இணுவில்.
21. K. G. லிங்கன், சிவமயம், வளாக ஒழுங்கை. திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
22. S. ரத்னதவம், புத்தூர் மேற்கு, புத்தூர்.
23: M. சபாரத்தினம், கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறை.
24. S.பாலச்சந்திரன், 14/11, அன்னசத்திர லேன், கந்தர்மடம்.
25. S. N. ஆசீர்வாதம், 11, பழைய பூங்காவீதி, யாழ்ப்பாணம்.

ஆரம்பம்:- WEEK END BATCH—22-10-83
WEEK DAY BATCH—26-10-83

Scholarship பரீட்சையில் தோன்ருத மாணவர்களும் இவ்வகுப்பில் சேர்ந்து படிக்கலாம்.

CANTABIA INSTITUTE
21, Main Street, JAFFNA
T'phone: 24201


# வன்னியில் 1000 ஆசிரியர் பற்றுக்குறை!

(வவனியா)

வன்னி மாவட்டத்தில் ஆயிரம் ஆசிரியர்கள் பற்றுக்குறை நிலவுகின்றது.

வவனியா மன்னர் முல்லைத் தீவு பகுதிகளே மேற்குறித்த மாவட்டமாகும்.

குறிப்பாக கிராமப்புற பாடசாலைகளிலே அதிக ஆசிரியர்கள் பற்றுக்குறை நிலவுததாகக் கணக்கிடப்படடுள்ளது.

அதே வேளையில் வவனியா பகுதிக்கு மாற்றலாகிவரும் அநேக ஆசிரியர்கள் தமது சொந்த ஊர்களுக்கு அருகாமையிலேயே மாற்றம் எடுத்துச் சென்றுவிடுகின்றனர்.

## விதை உருளைக்கிழங்கு விநியோகம்

(பண்டத்தரிப்பு)

உடுவில் கமநலசேவை நிலையப் பிரதேசத்தில் இவ்வருட விதை உருளைக்கிழங்கு விநியோகம் சுன்னுகம் ப. நோ. கூ. சங்கத்தில் வைத்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வருடம் ஒரு குறிப்பிட்ட தொகை விதை உருளைக்கிழங்குகளே இப்பிரிவுக்கு வழங்கப்பட்டிருப்பதால், விதை உருளைக்கிழங்குகோரி விண்ணப்பித்திருந்த சகல விவசாயிகளுக்கும அவற்றைவிநியோகிக்க முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## அகதிகளுக்கு வேலைவாய்ப்பு

(நயினுதீவு)

நயினுதீவு ஸ்ரீ நாகபூஷணி அன்மன் ஆலயத்தில் நடைபெற்றுவரும் வேலைத்திட்டங்களில், அண்மைச் சம்பவங்களால் அகதிகளாக இடம் பெயர்ந்த பலருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

## கோலக் கொழும்பு நகரும் எரிந்தது!

ஆடிக் கொடுமையைப் பாடிமுடித்திட
ஆரால் முடியுமம்மா!—நெஞ்சம்
நீருகிப் போகுதம்மா!
வாடி வதங்கி எரிந்து கரிந்திட்டார்!
மானத் தமிழரெல்லாம்—ஈழத்தன்
மானத் தமிழரெல்லாம்!

மந்திரி மார்களும் மாடத்திருந்துமே
மகிழ்ந்துமே பார்த்தாரோ!—கொலையை
மகிழ்ந்துமே பார்த்தாரோ!
சிந்தை கலங்குது! தேசியக் குண்டர்கள்
சேய்களைக் கொன்ருரே!—தமிழ்க்குலத்
தாயரைக் கொன்ருரே!

வெட்டிவிழுத்தினர்! கட்டியடித்தனர்!
வீரச் செயலிதம்மா—தேசிய
வீரச்செயலிதம்மா!
கொட்டி முழக்கிக் கொலைகள் புரிந்தனர்!
குண்டர்கள் ஆட்சியிது—இலங்கைக்
குண்டர்கள் ஆட்சியிது

தார்மீக ஆட்சியில் தமிழ்க் கர்மவீரர்கள்
தலைகள் இழந்தாரே!—ஐயையோ
தலைகள் இழந்தாரே!
ஆரிதைக் கேட்பவர்! ஆடிக்கொடுமையை
ஆரிடம் சொல்வம் அம்மா—நீதியை
ஆரிடம் கேட்பம் அம்மா!

கத்தியும் வாளும் கலந்தொளிவீடக்
கைக்குண்டிரைச்சலிடத்—தெருவில்
கைக் குண்டிரைசலிட
உத்தமர் புத்தர்கள் பார்த்துக்களித்தாரே?
ஓடித் தடுக்கவில்லை!—ஒருவரும்
கூடித் தடுக்கவில்லை?

கொல்லுங் கொலைக்களம்சென்று நவகாளிக்
குண்டரைக் கண்டு! கண்டு!—காந்தி
குண்டரைக் கண்டுநின்று
நல்லதைச் செய்யுங்கள்! நாசக் கொலையினுல்
நாடு அழியுதென்ருர்—காந்தி
நாடி அழுது சொன்னுர்!

தன்னுயிர் நீத்தும் தருமம் உரைத்திடத்
தலைவன் ஒருவனில்லை—இலங்கையில்
தலைவன் ஒருவனில்லை!
மன்னிய மாதவப் புத்தரைப் போற்றிடும்
வாய்மையர் யாருமில்லை—நாட்டில்
தூய்மையர் யாருமில்லை!

ஆடிக் கொடுமையைப் பாடிக்கு வித்திட
ஆகுமட்டும் முயல்வேன்—என்னுல்
ஆகுமட்டும் முயல்வேன்!
பாடி எழுதிப் படித்தும் பயன் எண்ணி
பாவிகள் 'நாசர்'களே—வஞ்சப்
பாவிகள் 'நாசர்'களே!

சித்தங் கலங்கி மடிந்தவர் எத்தனை!
தேசம் அழிந்த தம்மா!—எங்கள்
தேசம் அழிந்த தம்மா
புத்தர் அறத்தினை நன்கு புரிந்திடில்
புன்மை யகன்றுவிடும்—எங்கும்
புன்மை யகன்றுவிடும்!

வித்துவான் சி.ஆறுமுகம்

# காங்கேசன்துறைப் பகுதிக் கொள்ளைகள்: சந்தேகநபர்கள் விசாரணையில்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் அண்மைக் காலத்தில் இடம் பெற்ற பல்வேறு கொள்ளைச் சம்பவங்கள் குறித்து துப்புத்துலக்குவதில் தீவிரமாக ஈடுபட்டுவரும் காங்கேசன் துறைபொலிசார் கொள்ளைப் பொருட்களில் ஒரு பகுதியை மீட்டுள்ளதுடன் சந்தேக நபர்களான சிலரை விசாரணைக்கும் உட்படுத்தியுள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் அண்மைக்காலமாக பல்வேறு கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன. துப்பாக்கி மற்றும் பயங்கர ஆயுதங்களைக்காட்டி வீடுகளில் புகுந்து நகை, பணம், பொருட்களை கொள்ளையடிக்கும் சம்பவங்களே அதிகமாக இடம் பெற்றன.

காங்கேகன்துறை பொலிஸ் குற்றத்தடுப்புப்பிரிவு பொறுப் பதிகாரியாக அண்மையில் நியமனம் பெற்றுவந்துள்ள சப். இன்ஸ்பெக்டர் திரு.ஆர்.எஸ். ஜெயபாலன் மேற்படி கொள்ளைச் சம்பவங்கள் குறித்து துப் புத்துலக்குவதில் ஈடுபட்டுள்ளார்.

அராலி, வட்டுக்கோட்டை, மாதகல்ஆகிய பகுதிகளில்அண்மையில் நடைபெற்ற பல்வேறு கொள்ளைச்சம்பவங்கள் பற்றி துப்புக்கிடைத்துள்ளதாகவும், இக்கொள்ளைச் சம்பவங்களை துப்புத் துலக்க பொதுமக்களும் குறிப்பாக கிராம இளைஞர்களும் தமக்கு உதவ முன்வந்துள்ளதாகவும் திரு. ஜெயபாலன் நமது நிருபரிடம் தெரித்தார்.

சப். இன்ஸ்பெக்டர் ஜெயபாலன் தலைமையில் சார்ஜன்ட் வி. தியாகராஜா மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அந்தோனிப்பிள்ளை, செபஸ்தியன், சிவபாதம் ஆகியோர் கொண்ட பொலிஸ் கோஷ்டி இதுவரை மேற் கொண்ட விசாரணையின் பயனுக கொள்ளைப் பொருட்களான றேடியோக்கள், கைக் கடிகாரங்கள், சைக்கிள்கள் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சில சந்தேகநபர்களும் விசாரணைக்குட்படுத் தப்பட்டுள்ளனர்.

கொள்ளையிடப்பட்ட நகைகள் பற்றிய துப்பும் கிடைத்து வருவதாகவும் விரைவில் பல்வேறு கொள்ளைச் சம்பவங்கள் குறித்த துப் புத் துலங்குமெனவும் பொலிசார் தெரிவித்தனர். (க)

# ஒழுங்கைகள் புனரமைப்பு: 45,000 ரூபா ஒதுக்கீடு

[மட்டுவில்]

மட்டுவில் வடக்குக் கிராமங்களின் ஒழுங்கைகளைப் புனரமைப்பு வேலை செய்வதற்காக சாவகச்சேரி எம்.பி. திரு. வி. என். நவரத்தினம் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் 45,000 ரூபா நிதியை ஒதுக்கியிருந்தார்.

இந்த நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மட்டுவில் வடக்கு ஆலடி ஒழுங்கை, தேவாலய ஒழுங்கை, வயிரவர் வங்களா வீதி ஆகியனவற்றின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பித்துள்ளன. ஒவ்வொரு வீதிக்கும் தலா 15,000 ரூபா வீதம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. [க]

# 5-வது கட்ட விநியோகத்தில் புதிய நடைமுறை அமுல்

(மாவிட்டபுரம்)

வன்செயலால் பாதிக்கப் பட்டு இங்கு வந்துள்ளவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் உணவு விநியோகத்தில் 5வது கட்ட விநியோகத்தில் புதிய நடைமுறை அமுல்செய்யப்படவிருக்கிறது.

பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்கள், கூட்டுத்தாபன ஊழியர்கள், தனியார் துறை ஊழியர்கள், தனியாகத் தொழில் புரிந்தவர்கள் ஆகியோருக்குக் கடந்த நான்கு தடவைகளாக உணவுவிநியோகம் செய்யப்பட்டது.

ஐந்தாவது கட்ட விநியோகம் அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார்துறை ஊழியர்களைத் தவிர்ந்த தனியாகத் தொழில் புரிந்து பாதிக்கப்பட்டு வந்தவர்களுக்குமட்டுமே விநியோகிக்கப்படவிருக்கிறது.

வலி-வடக்கு உதவிஅரசாங்க அதிபர் திரு. க. மகாதேவா புதிய முறைப்படி 5வது கட்ட விநியோகம்செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார். (இ)

# அமெரிக்க போதகரின் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

அமெரிக்கப் போதகர் வண ஆத்தர் முல்லர் தனது பன்னிரண்டாவது உலக சுவிசேஷ சுற்றுப்பயணத்தை மேற் கொண்டு இலங்கை வந்துள்ளார்.

இவரின் பிரசங்கமொன்று நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆனைக்கோட்டை கூளாவடியிலுள்ள நிறைவான புதுவாழ்வின் ஐக்கிய நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

# சட்டவிரோத மின் பாவிப்பு கண்டுபிடிப்பு

(மன்னர்)

மன்னார் பட்டினத்தில் இரு வர்த்தக நிலையங்களுக்கு சட்டவிரோதமாக மின்சாரம் பெறப்பட்டது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

மன்னார் மின்சார அத்தியட்சகர் திரு, எஸ். கணேசன் மேற்கொண்ட தீவிர நடவடிக்கையின் பயனுகவே சட்டவிரோதமாக மின்சாரம்பெறப் பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

இதுதொடர்பாக இருவர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதேவேளை மன்னார் பட்டினத்தில் சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெறுவோர்களைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (க)

# 2500 ரூபா அபராதமும் 6 மாதச் சிறையும்

(யாழ்ப்பாணம்)

கசிப்பு வழக்கு ஒன்றில் எதிரிக்கு 2500 ரூபா அபராதமும், 5 வருடம் ஒத்திவைக்கப்பட்ட 6 மாதக் கடூழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ், நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில், உரும்பராய் கிழக்கைச் சேர்ந்த அ. கந்தசாமி என்பவர் சட்ட விரோதமாக சாராயம் வடித்ததாகவும் 1440 கிறும் கோடாவைத் திருந்ததாகவும், 168 கிறும் கசிப்பு வைத்திருந்ததாகவும், உபகரணங்கன் வைத்திருந்ததாகவும் 4 குற்றங்கள் சுமத்தப்பட்டிருந்தன. (க)

# கொலைச் சந்தேகநபர் பிணையில் செல்ல அனுமதி!

(வவனியா)

தங்கையின் கணவனை கத்தியால் குத்தி கொலை செய்ததாக சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட நபருக்கு பிணை வழங்கப் பட்டுள்ளது.

வவனியா மேல் நீதிமன்ற நீதிபதி திரு ஜே. ஜி. ஆசீர்வாதம் மேற்படி சந்தேக நபரான வெள்ளையன் திருச்செந்தூரனை ஐயாயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதி வழங்கியுள்ளார்.

1983ம் ஆண்டு பங்குனி 27ம் திகதி தவசிகுளம் என்ற இடத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ரெங்கசாமி சுந்தரலிங்கம் என்ற நபரே கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டவராவார்

மரக்கறி வகைகளை சைக்கிளில் ஏற்றிக்கொண்டு சந்தைக்கு வரும் வழியிலேயே இச்சம்பவம் இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

சட்டத்தரணி மு. சிற்றம்பலம் சந்தேக நபரின் சார்பில் பிணைமனுவை மேல் நீதிமன்றத்தில் தாக்கல்செய்தார்.

அரச தரப்பில் சட்டத்தரணி எஸ். ஸ்ரீஸ்கந்தராசா ஆஜரானார்.

# பிதா ஜெயசீலன் குருமட உப அதிபர்

(சுண்டிக்குளி)

வண. பிதா ஜே.ஈ.ஆர். ஜெயசீலன் அடிகள் யாழ். கொழும்புத்துறை புனித சவேரியர்குருமட உபஅதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். குருமட விரிவுரையாளராகவும், யாழ் பல்கலைக்கழகவிரிவுரையாளராகவும் கடமையாற்றிய வண ஜெயசீலன் அடிகள் அண்மையில் மைசூர் மகாராஜாவிடம் ஆங்கில இலக்கியத்துக்கான சிறப்புப் பரிசான தங்கப்பதக்கம் பெற்றவர் என்பது குறிப் பிடத்தக்கது. (அ)

# கையும் மெய்யுமாக பிடிபட்டார்!

(பண்டத்தரிப்பு)

மாதகல் பிரதான வீதியிலுள்ள ஆர். கந்தசாமி என்பவருக்கு சொந்தமான பலசரக்கு கடையில் கூரையைப் பிரித்து திருட முற்பட்ட நபர் ஒருவர் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டுகாங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் பொதுமக்கள் உதவியுடன் ஒப்படைக்கப்பட்டார். இக் கடையில் இதற்கு முன்னர் மூன்று தடவை திருட்டுச் சம்பவம் நடைபெற்றது குறிப்பிடத் தக்கது.

தற்போது பிடிக்கப்பட்ட நபருக்கு இப்பகுதியில் நடைபெற்ற வேறு பல கொள்ளைச் சம்பவங்களிலும் தொடர்பு உண்டா என்று பொலிசார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.




விலை - 790/- முதல் 7000/- வரை

**SCIENCE ACADEMY** 310, Clock Tower Road, Jaffna.

A/L 84 DAY CLASSES — நடைபெறுகிறது

தூய, பிரயோக கணிதம் — வெக்டர் வேலாயுதம்.

வெக்டரின் DAY CLASSES ஆரம்பமாகியுள்ளன.

காலை 7-00 தொடக்கம் 11-00 வரை

ராணி (யாழ் நகர்)
10-30, 2-30, 6-15
கமலஹாசன்- அம்பிகா
சகலகலா வல்லவன்

சாந்தி யாழ்நகர்
10.30, 2 30, 6.15,
கமல்-ஸ்ரீதேவி
மூன்று முடிச்சு
(புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 2-00, 4-30, 6-45
Neighbours
from 19-th and 20-th
Bud Spenser
Terrance Hill in
ODDS AND EVENS

லதா (கோண்டாவில்)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி ஆர்- சரோஜாதேவி
பெற்றால்தான்
பிள்ளையா?

ராஜா [யாழ்.நகர்]
10-30, 2-30, 6-00
பாக்கியராஜ்-அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
அந்த 7 நாட்கள்
[கலர்]

சில தினங்கள் மட்டும்
ஹரன் (யாழ். நகர்)
காலை 10-30, 2-30, 6-30
சிவாஜி-சரிதா
ராதா-
ராஜீவ் துணை
(கலர்)

லிடோ (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-15, 6-30,
விடியும்வரை
காத்திரு

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10 30, 2.15,
4.45, 7.00
A one man Army
Clint Eastwood in
OUT LAW JOSEY
WALES
(Action)
(Color Scope)

மனோகரா
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15,
5-00, 7-15
1976-ம் ஆண்டில் உலகத்தையே வியப்பில் வைத்த ''என்றபே'' விமான நிலையத்தில் நடந்த பயங்கரமான விமானக் கடத்தல் பற்றி நீங்கள்கேட்டும், வாசித்துமிருப்பீர்கள். இந்த உண்மையான சம்பவத்தை இப்பொழுது வெள்ளித் திரையில் காணத்தவறாதீர்கள்.
''RAID ON ENTEBBE''
in
Operation
Thunderbolt
The way it. Really
happened.
The Tense Action -
Packed Story of the Raid
that startled the World.
Passess Concessions
suspended.

# இந்துசமயதொண்டர்இயக்கம் அங்குரார்ப்பணம்

(மாவிட்டபுரம்)

பிறசமயங்களில் உள்ள தொண்டர் இயக்கங்கள் போன்று இந்து சமயத்திலும் தொண்டர் இயக்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை இந்து இளைஞர் பேரவையினரால் மேற்படி தொண்டர் இயக்கம் உருவாக்கப்பட்டுள்ளதாக மேற்படி பேரவைத் தலைவர் திரு தி. சி. சண்முகலிங்கம் தெரிவித்தார்.

இத்தொண்டர் இயக்கம் பற்றி திரு தி. சி. சண்முகலிங்கம் தெரிவிக்கையில் கூறியதாவது: ''சமய வளர்ச்சி மட்டுமன்றி பிறசமய நிறுவனங்கள் போன்று அவ்வப் பகுதி மக்களின் தேவைக்கு சேவையாற்ற தொண்டர் இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம், சைவசமயத்தில் சேவை மனப்பான்மையுடன் செயல்படும் இயக்கங்கள் எதுவும் இல்லை. சாரணிய இயக்கம், சென் ஜோன் அம்புலன்ஸ் போன்ற இயக்கங்கள்தான் எமது சமய விழாக்களில் தொண்டாற்றுகின்றன. நமது சமயத்தில் இத்தொண்டர் நிறுவனம் இல்லாத குறையை நிவர்த்திக்கும் வகையிலேயே இச்சைவத் தொண்டர்சபை நிறுவப்பட்டுள்ளது. சைவ முறைப்படி உடை உடுத்து சேவையாற்றுகிறார்கள். நல்லூர் கந்தசுவாமி உற்சவ காலத்திலும், வண்ணை பெருமாள் கோவில் புரட்டாதி சனி திருவிழாக் காலத்திலும் மேற்படி தொண்டர்சபை சேவை யாற்றி பெரும் பாராட்டைப் பெற்றது. 30 தொண்டர்களுடன் இச் சபை ஆரம்பிக்கப் பட்டுள்ளது'' என்று கூறினார்.

## யாழ். ஆஸ்பத்திரி ஆரோக்கிய மாதா உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆஸ்பத்திரியில் அமைக்கப்பட்டுள்ள ஆரோக்கிய மாதா வருடாந்த உற்சவம் இம்மாதம் 28ந் திகதி ஆரம்பமாகவுள்ளது. 30ம் திகதி நடைபெறும் சுருப ஆசீர்வாதத்துடன் விழா முடிவடையும்.

(மா)

## செயலாளருக்கு விசேட அதிகாரம்

(மட்டுவில்)

சாவகச்சேரி நகரசபைஉறுப்பினர்கள் ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து சபையின் நாளாந்த நிர்வாகக் கடமைகளை சபைச் செயலாளர் திரு ரீ. நவரத்தினராஜா கவனித்து வருகிறார்.

நாளாந்த அத்தியாவசிய நிர்வாகம், ஊழியர் சம்பளம், பராமரிப்புவேலைகளைச்சமாளிப்பதற்கு சபை செயலாளருக்கு விசேட அதிகாரங்கள் உள்ளூராட்சி ஆணையாளரால் வழங்கப்பட்டுள்ளது. (க)

## 3வது அனைத்துலக ஹிந்தி மாநாடு

புதுடில்லி, அக். 17

புதுடில்லியில் நடைபெறவிருக்கும் 3வது அனைத்துலக ஹிந்தி மாநாட்டில் பல மொழிகளையும் சேர்ந்த 40 அறிஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

தமிழகஎழுத்தாளர்அகிலன், மலையாள எழுத்தாளர் சிவசங்கரன், கன்னட எழுத்தாளர் ஹரி கோபாலகிருஷ்ணன் ஆகியோரும் இப் பட்டியலில் அடங்குவர்.

(சு-வெ)

## வவனியா ஹோட்டல்முதலாளி கொலை: 2-ம் எதிரி ராஜ்குமாரும் யாழ்சிறையிலிருந்துதப்பினர்

### நீதிமன்றத்தில் அறிவிப்பு

(நமது வவனியா நிருபர்)

வவனியாவில் பெரும் பரபரப்பூட்டிய ஹோட்டல் முதலாளி கொலை வழக்கின் 2ம் எதிரியான மு. ராஜ்குமார் யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து தப்பிவிட்டார் என பொலிஸ் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

வவனியா மேல்நீதிமன்றத்தில் வவனியா - அம்பலாங்கொட ஹோட்டல் முதலாளி ஆரியரெட்ண கொலைவழககு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மேற்கண்ட விபரம் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

முந்திய தவணைகளில் தலைமறைவாகியிருந்த முதலாம் எதிரியான பிரபலகேடி அமிரே சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் ஆஜர்செய்யப்பட்டார் 2ம் எதிரிககு எதிராக பிடியாணையைப் பிறப்பித்த மேல் நீதிமன்ற நீதிபதி திரு. ஜே. ஜி ஆசீர்வாதம் விசாரணையினை டிசம்பர் மாதம் 5ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

திடீரென தலைமறைவான ஆரியரெட்ணடீ சில்வாவின் உடல் அழுகியநிலையில் 79ம் ஆண்டு அக்டோபர் மாதம் 9ம் திகதி வவனியா வாவியில் மிதக்கக் காணப்பட்டதை அடுத்து புலன்விசாரணையை மேற்கொண்ட வவனியா பொலிசார் ஹபுதாந்திரிக்கே டென் அமரசிங்கா, முத்துச்சாமி ராஜகுமார். எம்.நிலாம்டீன், இறந்தவரின் சிறிய தாய் சிச்சி வினிதா டீ சில்வா ஆகிய நால்வருக்கு எதிராக வவனியா நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.

3ம் எதிரி அரச தரப்புச் சாட்சியாக மாறியிருந்தார். 4ம் எதிரி மாஜிஸ் ரேட்டினால் விடுதலை செய்யப்பட்டிருந்தார். இதனையடுத்து முதலாம், இரண்டாம் எதிரிகள் மீதான விசாரணை மேல்நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட்டிருந்தது.

மேல் நீதிமன்ற விசாரணை ஆரம்பமாக முன்னரே பல குற்றச்செயல்கள் தொடர்பாக தேடப்பட்டவரும் பிரதான சாட்சியாகவுமுள்ள நிலாம்டீன் தலைமறைவாகியிருந்தார் அவருக்கெதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

பின்னர் காலஞ்சென்ற வவனியா ஐ.தே.க. அமைப்பாளருக்கு சொந்தமான பெற்றோல் நிலையக் கொள்ளையையடுத்து முதலாம் எதிரி தலைமறைவாகியிருந்தார.

பொலிசார் இராணுவத்தினரின் தீவிர தேடுதலையடுத்து வவுனியாவிலிருந்து சென்ற விசேடபொலிஸ்குழுகிளிநொச்சிக் காட்டில் வைத்து கைத்துப்பாக்கியுடன் அமரேயைக் கைதுசெய்திருந்தது. சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு வவுனியா பொலிஸ் அத்தியட்சகரின் உத்தரவின்பேரில் பயங்கரவாதத்தடுப்புச்சட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம்சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட 2ம் எதிரி ராஜ்குமாரும் சிறைச்சாலையிலிருந்து தப்பியோடிய 12 பேரில் ஒருவரென்று இட போது அறிவிக்கப்பட்டுள்ளது.

அமரே சார்பில் ஆஜரான சட்டத்தரணி கனகமனோகரன் 2ம் எதிரி உண்மையில் தப்பிச சென்றாரா அல்லது அவருக்கு வேறு ஏதாவது நடந்ததோ தெரியவில்லை என்றும் தெரிவித்தார்.

இவ்வழக்கை நடத்தும் பொறுப்பை சட்டத்துறைத் தலைமையதிபதி சிரேஷ்ட அரச சட்டத்தரணி திரு.ஜோ பெரேராவின் பொறுப்பில்ஒப்படைத்துள்ளனர். அவரது நலன்களை அரச சட்டத்தரணி திரு.சுந்தரம் ஸ்ரீஸ்கந்தராஜா கவனித்தார்.

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 10-30 2-30.
6-15
சிவாஜி-வாணிஸ்ரீ
உயர்ந்த மனிதன்

தணிக்கைச் சபை மீண்டும் இதைப் பார்க்குமா?
தணிக்கைசெய்யப்படுமா?
தடைசெய்யப்படுமா?
இன்னும் எத்தனை நாட்களுக்குக்காட்சியளிக்கப்படுமா?
இன்றே பாருங்கள்
றீகல் (யாழ். நகர்)
Daily: 10-30 a.m., 2-30,
4-45, 7-00 p.m.
Christopher Walken in
Dogs of War
WAR FILM—COLOR

## நீண்டவரட்சியின் பின் மழை

(வவனியா)

வரட்சியினை அடுத்து வவனியாவிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் மழை பெய்யஆரம்பித்துள்ளது.

இங்கு நீண்ட பல மாதகாலமாய் தொடர்ச்சியாக வரட்சி நிலவியதும் குடிநீருக்கு தட்டுப்பாடும் நிலவியது தெரிந்ததே மழைபெய்ய ஆரம்பித்திருப்பதினால் பெரும்போக பயிர்ச் செய்கையை ஆரம்பிக்க ஏதுவாக இருக்கின்றது அதே நேரத்தில் நவதானியங்களில் விலையும் அதிகரித்துள்ளது.

குறிப்பாக உழுந்து, பயறு, நிலக்கடலை, தட்டாப்பயறு போன்ற தானியங்களின் விலை உயர்ந்துள்ளது.

குறித்த தானியங்கள் பயிரிடும் காலம் இதுவாக இருப்பதே விலை ஏற்றத்துக்கு முக்கிய காரணமாகும் என கூறப்படுகின்றது. விதைநெல்லின் விலையும் உயர்ந்துள்ளது.

## தந்திமூலம் அறிவிக்க வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த ஆசிரியர்களை தாம் கடந்த 13ம் திகதி முன்னைய பாடசாலைக்குக் கடமைக்குச் செல்லமுடியாதது பற்றி தத்தமது அதிபருக்குத் தந்தி மூலமும், பதிவுத் தபால் மூலமும் அறிவிக்க வேண்டுமென்று இ. த. ஆ. சங்கச்செயலாளர் திரு. த. மகாசிவம் கேட்டுக் கொண்டுள்ளார். (நயினைநிரு)

## இன்றைய பலன்

ஐப்பசி 1-ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(18-10-83)

மேடம்: பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும் உதவிசெய்யப்போய் உபத்திரவத்தைத் தேடிக்கொள்ளுவீர் அரசபயத்திற்கு இடம் ஏற்படும் ஆகையால் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்வீர்.

இடபம்: ஆக்கப் பணியில் ஈடுபடுவீர்கள் பிறருடைய ஆதரவு தராளமாகக் கிடைக்கும் தாய்வழியால் நற்செய்தியும் கிடைக்கலாம் வாகனம் செலுத்துவோருக்கு நல்லநாள்.

மிதுனம்: புத்திக் கூர்மையுடன் புதிய எண்ணங்களும் தலைதூக்கும் புத்திரர்களால் புகழும் சிடைக்கும் இறை நம்பிக்கையுடன் இல்லத்தில் இனிமை தவழும்கடமையாற்றுமிடத்தில் மதிப்பு உயரும்.

கடகம்: பகை மூட்டத்தின் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள் சிறிய விடயத்திற்குக்கூட குறைகேட்க நேரிடும் கடற்றொழிலில் ஈடுபடுவோர் கவனம்செலுத்தவும்.

சிங்கம்: எதிர்பார்த்த இன்பம் உங்களை அணைத்துக் கொள்ளும் ஆரம்பத்தில் முட்டுக்கட்டை போட்டவர்கள் முடிவில் ஆதரவுகொடுப்பார் காதல் ஜோடிகளுக்கு கனிவானதினம்.

கன்னி: பணமுடையில் தயக்கம் ஏற்படும் கடன்தொல்லைகளால் கஷ்டப்படுவீர்கள் தொழில்துறையில் தொல்லைகள் தோன்றிமறையும் நம்பிக்கை மோசடி நடக்கும்.

துலாம்: ஒளிமயமான காலம் இன்று ஆலயவழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள் உங்கள் உற்சாகத்தில் பெற்றோரும் துணைநிற்பர் விருந்தினர் வருகையால் வீடே கலகலப்பாகும்.

விருச்சிகம்: சொகுசான வாழ்க்கையை விரும்புவீர்கள் ஆடம்பரமான ஆடைகளில் மனநாட்டம் செல்லும் படித்தவர்களின் தொடர்பினால் பயனடைவீர் எல்லாம் இன்பமயம்.

தனு: இன்று அதிக ஆதாயம்கிடைக்கும் புதுத்தொழில் முறைகளை மனம்நாடும் சகோதர வழியால் நன்மையும் வந்து சேரும் மக்களுக்கு மகிழ்ச்சிகரமான தினம்.

மகரம்: சீறிவரும் கோபம் உங்களை நிலைதடுமாற வைக்கும் தானிய நஷ்டத்துக்கும் இடமுண்டு செலவீனங்களை கட்டுப்படுத்தி நடக்கவும் தூரதேயத்துவாசம் துயரததைல் ஆழ்த்தும்.

கும்பம்: சிறு விடயத்திற்குக் கூட அதிகம் ஆத்திரப் படுவீர்கள் வீணான சந்தேகம் தோன்றும் வாழ்க்கையில் எதையும் சிந்தித்தபின் செயலாற்றவும் ஆயுதங்களுடன் பழகுபவர் அவதானம் வேண்டும்.

மீனம்: நேர்முகப் பரீட்சைக்கு உகந்ததினம் தெய்வத்தின் அருள் தாராளமாய்க் கிடைக்கும் அரசியல் வாசிகளுக்கு இன்று அதிர்ஷ்ட தினம்.

சோதிடக் கலாநிதி
தருமலை
க. வேலுப்பிள்ளை

பணிப்பெண் தேவை

ஆங்கில அறிவுள்ள முப்பத்தைந்து வயதிற்குட்பட்ட பணிப்பெண் தேவை. பிற்பகல் இரண்டு மணிக்கு முன் நேரில் சந்திக்கவும்.

சு. ஸ்ரீபாஸ்கரன் B.A.

7-ம் கட்டை ஒழுங்கை,
மல்லாகம். 9339

# சங்கிலி அறுத்தவரும் 'புலிப்படை' என்றாராம்!

(யாழ்ப்பாணம்)

வீதியில் சென்றுகொண்டிருந்த பெண்ணின் கழுத்திலிருந்து சங்கிலி ஒன்றை அறுத்துச்சென்ற சைக்கிள் இளைஞர் தாம் 'புலிப்படை'யைச் சேர்ந்தவர் என்று கூறிக்கொண்டு தப்பி ஓடிவிட்டாராம் இது குறித்து யாழ். பொலிசில் பாஷையூரைச் சேர்ந்த திருமதி ஜெமணி சின்னராஜா என்பவர் புகார்செய்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று காலை தாம் பாஷையூர் சந்தையிலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் தமது கழுத்திலிருந்த சுமார் 5ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை பின்னால் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் பறித்துச்சென்றதாகவும் தாம் சத்தமிட்டபோதும் அந்த இளைஞர் தாம்'புலிப்படை'யைச்சேர்ந்தவர் என்றுகூறிக்கொண்டு ஓடி மறைந்துவிட்டாராம்.

இதேபோன்று கடந்த பெப்ரவரியிலும் தாம்மற்றொருஇளைஞரினால் ஏமாற்றப்பட்டு 1400 ரூபாவை இழந்ததாகவும் அப்பெண்மணி கவலையுடன் எமது நிருபரிடம் தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கியில் 1400 ரூபாவை எடுத்துக்கொண்டு வெளியே வந்தபோது அவசர அவசரமாக வங்கியிலிருந்து ஓடிவந்த இளைஞர் ஒருவர் 1400 ரூபாவுக்குப் பதிலாக 100ரூபா கூடுதலாக 1500ரூபாவைவங்கி ஊழியர்கள் தந்துவிட்டார்என்று அதனை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கூறியதை அடுத்து தாம் பணத்தைக் கொடுத்து எண்ணிப் பார்க்கும்படி கூறியதாகவும் அந்தப் பணத்தை வாங்கிய இளைஞர் அப்பணத்துடன் ஓடி மறைந்து விட்டதாகவும் அப்பெண்மணி கூறினார்.

இவர்களைப் போன்ற இளைஞர்களின் செயலினால் தமது ஏழைக் குடும்பம் மேலும் கஷ்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்றும் அப்பெண் கூறினார்.

# துப்பாக்கிமுனையில் சங்கிலி திருட்டு

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கிமுனையில் பெறுமதியான தங்கச்சங்கிலி கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

கச்சேரி - நல்லூர் வீதியில் உள்ள கே. எம். விசுவநாதன் என்பவரின் வீட்டில் இக் கொள்ளைச் சம்பவம் நடைபெற்றது.

இரவு 8 மணியளவில் வீட்டுக்குள் புகுந்த 3 இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தி 8ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியைகொள்ளை அடித்துச் சென்றதாக யாழ். பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (மா)

# இலங்கைக் கடற்படை தாக்குகிறார்களா?

## பம்பாயில் 26-ம் திகதி மாநாடு

(பம்பாய்)

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற் படையினரால் துன்புறுத்தப்படுவதாகப்புகார் கூறப்படுவது குறித்து இம் மாதம் 26-ம் திகதி பம்பாயில் மகாநாடு ஒன்று நடத்தப்படவுள்ளது.

இந்தியக் கடல் எல்லையில் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதாகவும் சுடப்படுவதாகவும் பல புகார்கள் அடிக்கடி தெரிவிக்கப்பட்டு வந்துள்ளன.

இதுதொடர்பாக இருநாட்டு அதிகாரிகளும் பம்பாயில் கூடி ஆராய்ந்து ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

# வவனியா நகரசபைக்கு புதிய தலைவர்!

(யாழ்ப்பாணம்)

வவனியா நகரசபைத்தலைவராக திரு. சிவகுரு சிவானந்தம் நியமிக்கப்பட்டுள்ளதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் அமைப்பு நிர்வாகச் செயலாளருக்கு உதவித் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

மேலும் உபதலைவராக திரு. சி. இ. செபஸ்தியாம் பிள்ளையும் உறுப்பினர்களாக திருவாளர்கள் எம். யோசேப், கோ. நடேசபிள்ளை, சி. கனகசிங்கம், க. கந்தசாமி ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், மீதியான இடங்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கும்படியும் அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மா-கு)

# முதற்பரிசு பெற்றார்!

[யாழ்ப்பாணம்]

வேலணை வி.ரி சி கல்வி நிறுவனம் நடத்திய வாணி விழாவில், பொதுமாணவர்களுக்கான பகுத்தறிவுக் கேள்வி பதில் போட்டியில் வேலணை சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஏழாம் வகுப்பு மாணவன் தனபாலசிங்கம் கமலேஸ்வரன் சகலகேள்விகளுக்கும் சரியான பதில் அளித்து முதற்பரிசைத் தட்டிக் கொண்டார்.

இவ்விழாவில் பல்கலை நிகழ்ச்சிகள், பட்டிமன்றம் முதலானவையும் இடம் பெற்றன.

# புதிதாகத் தெரிவான மாணவருக்கு இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

தென் இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கென இம் மாதம் 20-ம் திகதி நடைபெற இருக்கும் ஆங்கில பரீட்சைகளுக்குச் சமுகமளிக்க வேண்டாம என்றும் அப்பரீட்சைகளை தமிழ் பகுதி பல்கலைக்கழகங்களில் நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் இடம் பெயர்ந்த பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியம் புதிய மாணவர்களுக்கு உறுதி அளித்துள்ளது.

புதிதாகப் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர் பிரதிநிதிகள் இடம் பெயர்ந்த பல்கலைக் கழக தமிழ் மாணவர் ஒன்றியத்தின் செயற்குழுவினரைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே மேற்கண்ட உறுதி அளிக்கப்பட்டது.

பேராதனை, மொறட்டுவ பல்கலைக் கழகங்களுக்கான புதியமாணவர் - பதிவுகள் தபால் மூலம் செய்யப்படுவதற்கான எமது கோரிக்கைகளை, குறித்த நிர்வாகங்கள் ஏற்றுக் கொண்டன. எனினும் இதுவரை கொழும்புப் பல்கலைக்கழகம் இக் கோரிக்கைக்குச் சம்மதம் தரவில்லை. இது குறித்து மேலும் நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் ஒன்றியம் தெரிவித்தது.

தனிப்பட்ட ஏதாவது பிரச்னைகளை எதிர்நோக்கும் புதிய மாணவர்கள் தம்மை யாழ்.பல்கலைக்கழகத்தில் சந்திக்குமாறு ஒன்றியத்தின் செயற்குழு கேட்டுக் கொண்டது.

# ரூ. 65 ஆயிரம் துணிவகைகள் சிக்கின

(மாவிட்டபுரம்)

மாதகல் கடற்கரை சந்தியிலிருந்து சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இருவரிடம் 65ஆயிரம் ரூபா பெறுமதியான கடத்தல் துணிவகைகள் நேற்றுச் சிக்கின!

காங்கேசன்துறை பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி திரு. ஆர். எஸ். ஜெயபாலன் இருவரையும் துணிகளுடன் கைது செய்தார்.

புடவை, சாரம் போன்ற இத்தத்துணிவகைகள் இந்தியாவிலிருந்து கடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

காங்கேசன்துறை சுங்கப் பகுதியிடம் கைதான இருவருடன்உடுபுடவைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# மன்னாரில் வயிற்றோட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் வயிற்றோட்ட நோயினால் பீடிக்கப்பட்ட பல சிறுவர்கள் மன்னார் அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். [சு]

# புனரமைப்பு பூரணத்துவம்

(புலோலி)

நல்லைஞானசம்பந்தர் ஆதீன குருமகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளால் அண்மையில் சங்குஸ் தாபனம் செய்யப்பட்ட கரவெட்டி கிழக்கு வன்னியப்பிள்ளையார் ஆலய புனரமைப்பு அத்திவாரம் கிராம மக்களால் பூரணப்படுத்தப்பட்டுள்ளது.

திருப்பணிக்குரிய பிரதம வரி (வானவரி) இம்மாதம் 21ந் திகதி நடைபெறுமென ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது.

## மானிப்பாய்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு ஒருமாதத்தில் கூட்டணி எவரையும் நியமிக்காத பட்சத் இடைத் தேர்தல் நடத்தப்படும்.

இதேவேளை ஏற்கனவே திருகோணமலை, வவனியா எம், பிக்களின் பதவிக்காலமும்முடிவடைந்துள்ளது. இவர்களின் காலியான இடங்களுக்குப் புதிய உறுப்பினர்களை நியமிக்காவிடில் இடைத்தேர்தல் வைக்கப்படும் என உதவித் தேர்தல் ஆணையாளர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அமைப்புச் செயலாளருக்கு கடிதம்ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

மானிப்பாய்த் தொகுதிக்கு எம். பி. யை நியமிப்பது சம்பந்தமாக கடந்த 11ம் திகதி உதவித் தேர்தல் ஆணையாளர் அனுப்பிய கடிதம் நேற்று 17ம் திகதி வந்து சேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏனைய பதினொரு பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் நவம்பர் 21ம் திகதி முடிவடைவதாகவும் அடுத்து பருத்தித்துறை, கோப்பாய், சாவகச்சேசரி எம்.பி.களின் பதவிக்காலம் டிசம்பர் 27-ம் திகதி மட்டில் முடிவடைவதாகவும் தெரியவருகிறது. (மா-கு)

# கருணாநிதி கண்டனம்

(சென்னை)

இலங்கையிலிருந்து லட்சக் கணக்கில் அகதிகள் வந்தால் இந்தியாவால் ஏற்கமுடியாது என்று பிரதமர் கூறியதை ஏற்கமுடியாது என்று தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி கூறியுள்ளார். (கு)

## மலையகதமிழரை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சந்திப்பின்போது பிரதமர் திருமதி காந்தியிடம எடுத்துக் கூறினார்.

இதேவேளை லண்டனிலிருந்து நேற்று முன்தினம் புதுடில்லி வந்து சேர்ந்த திரு. அமிர்தலிங்கம் நேற்று நிருபர்களை சந்தித்தார்.

''இலங்கை அரசு நிலைமையைத திசைதிருப்புவதற்காக எனது மகனின் கடிதம்பற்றி திரித்துக் கூறிவருகிறது. இலங்கைத்தமிழர்களின் பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்வேன்' என்று திரு. அ. அமிர்தலிங்கம் நிருபர்களுக்கு அளிதத பேட்டியில் தெரிவித்தார்.

இலங்கைக் தமிழ் மக்களின் பிரச்னைக்குத் தீர்வு காணுவதற்கான ஆதரவைத திரட்டும் பொருட்டு தமிழ் நாட்டிலுள்ள தீவிரவாதக் குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். (வெ-கு)

## வன்முறை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முனை முறிப்பதற்கும் தென்னிலங்கையிலுள்ள மக்களை உணர்ச்சி வசப்படுத்துவதற்கும் அரசு முயற்சிப்பது வரவேற்கக்கூடியதல்ல.

''எத்தகைய வன்முறைச் சம்பவங்களோடும் எமக்கு தொடர்பில்லை என்பதை நிரூபிக்க சுதந்திரமான சர்வதேச விசாரணையைச் சந்திக்க தயாராக உள்ளோம்.

''ஐ. தே. க. கட்சி அல்லது அதனோடிணைந்த இயக்கங்கள் அரசியல் வன்செயல் சம்பவங்களோடு சம்பந்தம்பட்டதா? கூட்டணி அல்லது அதனோடு இணைந்த இயக்கங்கள் அரசியல் வன்முறைச் சம்பந்தப்பட்டதா என்பதை விசாரித்து அறிய பொதுநல அரசு பாராளுமன்ற ஒன்றியத்தின் மூலம் ஒரு விசாரணைக்குழுவை நியமிக்கும்படி அரசாங்கத்தை வேண்டுகிறோம்.

''பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணை ஆணைக்குழுவின் முடிவுகளை நமது இயக்கம் ஏற்கத்தயாராக உள்ளது''. (மா-கு)

## மாதகல்...

(1ம பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன்துறை பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப்பிரிவு பொறுப்பதிகாரி திரு. ஆர். எஸ் ஜெயபாலன் ஸ்தலத்துக்குச் சென்று விசாரணை நடாத்தினர்.

மாதகல் வடக்கு வன்னியர் கோவிலடியிலுள்ள கடற்கரையில் கிடங்கொன்றில் இச்சடலம் இருந்தது.

மாதகல் பிள்ளையார் கோவில் வாசிகசாலையில் நடந்த திருட்டொன்றிற்கும் இம்மரணத்துக்கும் சம்பந்தமிருக்கலாமெனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

வடமுனை விவகாரம்:

# உயர்மட்ட மாநாடு நடக்கவில்லை

(மட்டக்களப்பு)

கல்குடா தொகுதியிலுள்ள வடமுனையில் அத்துமீறிக் குடியேறியவர்களால் உருவாகியுள்ள நெருக்கடி நிலைகுறித்து ஆராய்வதற்காக கூட்டப்பட்டிருந்த உயர்மட்ட மாநாடு நடைபெறவில்லை என்று தெரிகிறது.

அத்துமீறிக் குடியேறியவர்கள் பலர் கூட்டமண்டபத்தை முற்றுகையிட்டதைத் தொடர்ந்தே கூட்டம் நடைபெறவில்லை எனத்தெரிகிறது. அமைச்சர் தேவநாயகம் கூட்டம் நடைபெறவிருந்த இடத்திற்கு செல்லவில்லையாம். [கு]

# மரண அறிவித்தல்

## V. M. நமசிவாயம்

(உரிமையாளர் பூமகள்வாசா ஸ்ரோர்ஸ் கொழும்பு)

அராலி மேற்கைச் சேர்ந்த மாணிக்கம் நமசிவாயம் காலமானார். இவர் கனகம்மாவின் அன்புக் கணவரும் சரோசினிதேவி, சாரதாதேவி, காலம் சென்ற சந்திரகுமார், சரஸ்வதிதேவி, சூரியகுமார்(கனடா), சகுந்தலாதேவி, சற்குணதேவி, சாந்தினிதேவி, சந்தானதேவி, சிவப்பிரகாசம், ஆகியோரின் தகப்பனாரும், சரவணபவான், திருநாவுக்கரசு, ஆகியோரின் மாமனாரும் செல்லத்துரையின் சகோதரரும், தருமராசா, செந்தமிழ்செல்வி, தங்கராசா, செல்வச்செல்வி, செம்மணச்செல்வி, தனராசா, ஆகியோரின் பெரிய தந்தையும், சுமி, சுரேஸ், சுபா, சதீஸ் ஆகியோரின் பேரனுமாவார். தகனக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (18 - 10 - 83) காலை 9 மணிக்கு பூணவடை மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: அ. குகானந்தன்

9383

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under Number B 100236/81. Eelanadu-P. O. Box, 49, Telegram, Eelanadu, Telephone, 22389—24126.